Series : 2LKNM

SET ~ 4

வினாத்தாள் குறியீடு எண் 10
Q.P. Code

வரிசை எண்.

Roll No.

மாணவர்கள் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

குறிப்பு / NOTE :

(I) இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **11** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
Please check that this question paper contains **11** printed pages.

(II) வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.

(III) இந்த வினாத்தாளில் **14** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
Please check that this question paper contains **14** questions.

(IV) எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.
Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.

(V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period. {}

தமிழ்
TAMIL

கால அளவு : 3 மணி
Time allowed : 3 hours

மொ.மதிப்பெண்கள் : 80
Maximum Marks : 80

General Instructions :

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   இவ்வினாத்தாள் 14 கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   *பகுதி அ – 2 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **1** முதல் **2** வரை]*

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   *பகுதி ஆ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **3** முதல் **6** வரை]*

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   *பகுதி இ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **7** முதல் **10** வரை]*

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   *பகுதி ஈ – 1 வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் **11**]*

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   *பகுதி உ – **3** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **12** முதல் **14** வரை]*

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

SECTION – A [Reading] 10 Marks

பகுதி – அ (படித்தல் திறன்) **10** *மதிப்பெண்கள்*

1. *பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.* **5 × 1 = 5**

ஆழமான நீர் நிலை மடு எனப்படும் . அச்சொல்லைக் கொண்ட ஊர்ப் பெயர்கள் பல தமிழகத்தில் உண்டு. நெல்லை நாட்டுக் கல் மடுவும் தஞ்சை நாட்டு முதலை மடுவும் தென் ஆற்காட்டு ஆனைமடுவும் சேலம் நாட்டுச் செம்மடுவும் இத்தகையனவாகும். இலஞ்சி என்னும் ஏரியைக் குறிக்கும். செல்வச் செழுமையால் பொன்னிலஞ்சி என்று புகழ்ந்து உரைக்கப்பட்டது அவ்வூர்.

இயற்கையில் அமைந்த நீர்நிலை பொய்கை எனப்படும். பொய்கையார் என்பது ஒரு பழந்தமிழ்ப் புலவரின் பெயர். அவர் பொய்கை என்னும் ஊரில் பிறந்தவர் என்பர். உண்பதற்குரிய தண்ணீர் நிறைந்த குளம் ஊருணி எனப்படும். ஊரார் உண்ணும் நீர் உடையதாதலால் ஊருணி என்னும் பெயர் அதற்கு அமைந்ததென்பர். ஊருணியின் பெயரால் வழங்கப்பெறும் ஊர்கள் தமிழ்நாட்டில் பல உண்டு. பேரூரணி என்ற ஊர் நெல்லை நாட்டிலுள்ளது. மயிலூரணி இராமநாதபுரத்தில் காணப்படும்.

இன்னும், ஊற்று நீரால் நிறையும் கேணியும் கிணறும் சில ஊர்களைத் தோற்றுவித்துள்ளன. சென்னை மாநகரிலுள்ள திருவல்லிக்கேணியும் நெல்லை நாட்டிலுள்ள நாரைக் கிணறும் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

வினாக்கள்:

(i) *இயற்கையில் அமைந்த நீர்நிலையின் பெயர் யாது?*

(A) *இலஞ்சி* (B) *பொய்கை*

(C) *ஊருணி* (D) *பேரூரணி*

(ii) *உண்பதற்குரிய நீர் நிறைந்த குளத்தின் பெயரில் அமைந்த ஊர்?*

(A) *ஆனைமடு* (B) *பொன்னிலஞ்சி*

(C) *ஊருணி* (D) *கண்மாய்*

(iii) *நீர் நிலையின் பெயர் கொண்ட பழந்தமிழ்ப் புலவர் யார்?*

(A) *முதலாழ்வார்* (B) *நம்மாழ்வார்*

(C) *பொய்கையார்* (D) *பேயாழ்வார்*

(iv) தமிழ்நாட்டின் தலைநகரில் நீர்நிலையின் பெயர் கொண்ட பகுதியாக விளங்குவது எது?

(A) திருவல்லிக்கேணி (B) நாரைக்கிணறு

(C) பெரம்பூர் (D) எழும்பூர்

(v) அதிக ஆழமான நீர் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?

(A) ஆனை மடு (B) மடு

(C) பள்ளம் (D) இலஞ்சி

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

கருதியதை முடிப்பதற்குரிய வழி வகைகளைக் காட்டுவதில் வல்லவர் திருவள்ளுவர். அறம் பற்றிய பல்வேறு வகையான கருத்துகள் இவ்வுலகில் உண்டு. "அறம் செய்க" என்று ஆணையிடுவது பிறமொழிகளின் மரபு. அறம் செய விரும்பு என்பது தமிழ் மொழியின் மரபு. மனம், மெய், மொழி இவற்றின் துணைகொண்டு அறம் செய்ய வேண்டும். இவற்றுள் மொழியால், மெய்யால் செய்யக்கூடிய அறங்களின் பொய்மையும் வஞ்சனையும் இருக்கக்கூடும். ஆனால் மனத்தால் எண்ணிச் செய்யக் கூடிய அறங்களில் மேற்கூறியவற்றிற்கு இடம் இல்லை. அதனால் தான் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்றகிறார் வள்ளுவர். செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். ஆகவே நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மாசின்றி வைத்துக் கொள்வது சிறந்தது. மனத்தூய்மை இன்றிச் செய்யப்பெறும் அறங்கள் செய்பவர்க்கும் செய்யப்பெறுவோர்க்கும் பயன் தராது. மனத்தூய்மை வாழ்க்கை முழுவதுமே சாதித்துத் தரக்கூடியது. அதை முயன்று பெறுவதே அறம். மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மை உடையன. இதனையே திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" என்று கூறுகிறார்.

வினாக்கள்:

(i) அறம் பற்றிய தமிழ்மொழியின் மரபு யாது?

(ii) மொழி, மெய்யால் செய்யக்கூடிய அறங்களின் தன்மை யாது?

(iii) சிந்தனையின் நிலைக்களனாகக் கருதப்படுவது எது?

(iv) வாழ்க்கையில் சாதிக்க எது தேவை?

(v) செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது எது?

SECTION – B [Grammar] 12 Marks

பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) இசை நிறையளபெடை

(A) உறாஅர் (B) வரனசைஇ

(C) உண்பதூஉம் (D) கொடுப்பதூஉம்

(ii) அன்மொழித்தெகை

(A) பெரிய மீசை வந்தார்

(B) மலர்க்கை

(C) செங்காந்தள்

(D) தேர்ப்பாகன்

(iii) பெயரெச்சத்தொடர்

(A) நண்பா எழுது (B) கேட்ட பாடல்

(C) காற்று வீசியது (D) பாடினாள் கண்ணகி

(iv) திணைவழாநிலை

(A) செழியன் வந்தது (B) செழியன் வந்தாள்

(C) செழியன் வந்தான் (D) செழியன் வந்தன

(v) முல்லை நிலத்திற்குரிய விலங்குகள்

(A) புலி, கரடி (B) முதலை, சுறா

(C) எருமை, நீர் நாய் (D) முயல், மான்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. *(எவையேனும் மூன்று மட்டும்)* **3 × 1 = 3**

(i) சுரமும் சுரம் சார்ந்த இடமும் _____

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) மருதம் (D) பாலை

(ii) பொருள்கோள் _____ வகைப்படும்

(A) பதினாறு (B) எட்டு

(C) பத்து (D) ஏழு

(iii) 'வைகறை' என்பது _____நிலத்தின் சிறு பொழுதாகும்.

(A) நெய்தல் நிலம் (B) முல்லை நிலம்

(C) குறிஞ்சி நிலம் (D) மருத நிலம்

(iv) விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் _____தொழிற்பெயராகும்.

(A) விகுதி பெற்ற (B) முதனிலைத்

(C) எதிர்மறை (D) முதனிலைத் திரிந்த

(v) 'திருவள்ளுவமாலை' கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது _____ வினா.

(A) கொடை வினா (B) கொளல் வினா

(C) அறி வினா (D) அறியா வினா

5. இலக்கணக் குறிப்பு தருக : *(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)* **3 × 1 = 3**

(i) பிஞ்சு விரல்

(A) உவமைத் தொகை (B) உம்மைத் தொகை

(C) வினைத்தொகை (D) உருவகம்

(ii) கேள்வியினான்

(A) தொழிற்பெயர்

(B) வினைமுற்று

(C) வினையாலணையும் பெயர்

(D) பெயரெச்சத் தொடர்

(iii) உறுபுகழ்

(A) விளித்தொடர் (B) உரிச்சொல் தொடர்

(C) பெயரெச்சத் தொடர் (D) வினையெச்சத்தொடர்

(iv) பசுவின் குட்டி

(A) மரபு வழு (B) திணை வழு

(C) இட வழு (D) கால வழு

(v) தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்

(A) குறிஞ்சி நிலத்தொழில் (B) முல்லை நிலத்தொழில்

(C) மருத நிலத் தொழில் (D) நெய்தல் நிலத் தொழில்

6. கூறியவாறு செய்க : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) விலஃஃகி – எவ்வகை அளபெடை எனக்கூறுக.

(A) செய்யுளிசை அளபெடை (B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(ii) கனிவாய் – உவமேயத்தைக் கூறு.

(A) கனி (B) வாய்

(C) கனி போன்ற வாய் (D) வாய் போன்ற கனி

(iii) தலை வணங்கினான் – வேற்றுமை வகையைக் கூறு.

(A) இரண்டாம் வேற்றுமைத்தொகை

(B) மூன்றாம் வேற்றுமைத்தொகை

(C) நான்காம் வேற்றுமைத் தொகை

(D) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

(iv) இது செய்வாயா? – வினா எதிர் வினாதல் விடையாக மாற்றுக.

(A) செய்வேன் (B) செய்ய மாட்டேன்

(C) செய்யாமலிருப்பேனா? (D) நீயே செய்

(v) நெய்தல்– சிறு பொழுதினைக் கூறுக.

(A) எற்பாடு (B) வைகறை

(C) மாலை (D) யாமம்

SECTION – C (Main Course Book) 31 Marks

பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. **3 × 1 = 3**

(i) பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் _____ விடல்.

(A) நட்பு (B) தொடர்கை
(C) தொடர்பை (D) பிரிவை

(ii) நாள்தொறும் நாடி முறைசெய்யா _____
நாள்தொறும் நாடு கெடும்.

(A) வேந்தன் (B) மன்னவன்
(C) அரசன் (D) மக்கள்

(iii) இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் _____
உள்ளுள் உவப்ப துடைத்து.

(A) மகிழ்ந்துள்ளம் (B) மகிழ்உள்ளம்
(C) மகிழ்துள்ளம் (D) மகிழ்த்துள்ளம்

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணை கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணை கிடந்த தேதமிழ் ஈண்டு"

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

(A) இரட்டுற மொழிதல் (B) தனிப்பாடல் திரட்டு
(C) தேன் சிட்டு (D) திருக்குறள்

(ii) தமிழ் எவற்றை அணிகலன்களாகப் பெற்றது?

(A) ஐம்பெருங்காப்பியங்கள் (B) ஐஞ்சிறு காப்பியங்கள்

(C) பத்துப்பாட்டு (D) எட்டுத்தொகை

(iii) தமிழழகனாரின் இயற்பெயர் என்ன?

(A) சோமசுந்தரம் (B) சுந்தரர்

(C) சண்முகசுந்தரம் (D) சண்முகப்பிரியன்

(iv) மேவலால் – பொருள் தருக.

(A) கிடைப்பதால் (B) பொருந்துதலால்

(C) பொருந்தாதலால் (D) கிடைக்கப்பெறுதலால்

(v) இப்பாடல் கடலை எதனோடு ஒப்பிடுகிறது?

(A) முத்துக்களோடு (B) மக்களோடு

(C) தமிழோடு (D) தமிழ்சங்கத்தோடு

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. **2 × 4 = 8**

(i) பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.

(ii) முதுபெண்டிர் விரிச்சி கேட்ட நிகழ்வை விளக்கி எழுக.

(iii) மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தது ஏன் என்பதை விளக்கி எழுதுக.

(iv) கோசல நாட்டில் எவை எவை இல்லை என்பதை கம்பர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 5 = 15**

(i) பாவாணர் குறித்தும் அவர் விளக்கிய சொல் வளம் குறித்தும் எழுதுக.

(ii) மொழிபெயர்ப்பில் அதிக கவனம் தேவை என்பதை உரிய நிகழ்வோடு விளக்கி எழுதுக.

(iii) இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புகளால் மனிதன் அடையும் பயன்களையும் சிக்கல்களையும் தொகுத்து வரைக.

(iv) வாழை இலை விருந்தின் வழிமுறைகளை வரிசையாகத் தொகுத்து எழுதுக.

(v) 'வளி' இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

SECTION – D (Non-Detail) 10 Marks

பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 10 = 10**

(i) உரைநடையின் அணி நலன்கள்

(ii) புதிய நம்பிக்கை

(iii) புயலிலே ஒரு தோணி

SECTION – E (Creative Writing) 17 Marks

பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **1 × 3 = 3**



For Visually Impaired Candidates

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) இக்கரைக்கு அக்கரை பச்சை.

(ii) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. **1 × 8 = 8**

(i) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உன் தம்பிக்கு முக்கிய சாலை விதிகளை விளக்கியும் கடைபிடிக்க வலியுறுத்தியும் கடிதம் ஒன்று வரைக.

(அல்லது)

(ii) மருந்தகம் ஒன்றிலிருந்து வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீர் அம்மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதரத்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று வரைக.

(எக்கடிதமாயினும் நும் முகவரி செ. மாறன் / செ. மாலா, எண். 36, செந்தில் நகர், திருச்சி – 600 202.

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – விசும்பின்துளி – வான்

சிறப்பு – மரம் வளர்ப்போம் – இயற்கையைப் போற்றுவோம்

முடிவுரை

(ii) முன்னுரை – மானுட மேன்மைக்கான வழிகள் –

செயலைத் திட்டமிடு – திட்டத்தைச் செயல்படுத்துதல் – வானம் வசப்படும் – முடிவுரை

(iii) முன்னுரை – முன்தோன்றி மூத்த தமிழ் -

இலக்கிய வளம் – இலக்கணச் சிறப்பு

அறிவியல் தமிழ் இணையத் தமிழ் – பழமையும் புதுமையும் – முடிவுரை



Marking Scheme
Strictly Confidential
(For Internal and Restricted use only)
Secondary School Examination, 2026 (X[th])
SUBJECT NAME ..Tamil.. **(Q.P. CODE /Set No** .006/.1D..**)**

General Instructions: -

1	You are aware that evaluation is the most important process in the actual and correct assessment of the candidates. A small mistake in evaluation may lead to serious problems which may affect the future of the candidates, education system and teaching profession. To avoid mistakes, it is requested that before starting evaluation, you must read and understand the spot evaluation guidelines carefully.
2	**"Evaluation policy is a confidential policy as it is related to the confidentiality of the examinations conducted, evaluation done and several other aspects. Its leakage to public in any manner could lead to derailment of the examination system and affect the life and future of millions of candidates. Sharing this policy/document to anyone, publishing in any magazine and printing in Newspaper/Website, etc. may invite action under various rules of the Board and IPC."**
3	Evaluation is to be done as per instructions provided in the Marking Scheme. It should not be done according to one's own interpretation or any other consideration. Marking Scheme should be strictly adhered to and religiously followed. **However, while evaluating, answers which are based on latest information or knowledge and/or are innovative, they may be assessed for their correctness otherwise and due marks be awarded to them. In Class-X, while evaluating two competency-based questions, please try to understand given answer and even if reply is not from marking scheme but correct competency is enumerated by the candidate, due marks should be awarded.**
4	The Marking scheme carries only suggested value points for the answers. These are in the nature of Guidelines only and do not constitute the complete answer. The students can have their own expression and if the expression is correct, the due marks should be awarded accordingly.
5	The Head-Examiner must go through the first five answer books evaluated by each evaluator on the first day, to ensure that evaluation has been carried out as per the instructions given in the Marking Scheme. If there is any variation, the same should be zero after deliberation and discussion. The remaining answer books meant for evaluation shall be given only after ensuring that there is no significant variation in the marking of individual evaluators.
6	Evaluators will mark (√) wherever answer is correct. For wrong answer CROSS 'X' be marked. Evaluators will not put right (✓) while evaluating which gives an impression that answer is correct and no marks are awarded. **This is most common mistake which evaluators are committing.**
7	If a question has parts, please award marks on the right-hand side for each part. Marks awarded for different parts of the question should then be totaled up and written in the left-hand margin and encircled. This may be followed strictly.
8	If a question does not have any parts, marks must be awarded in the left-hand margin and encircled. This may also be followed strictly.
9	If a student has attempted an extra question, answer of the question deserving more marks should be retained and the other answer scored out with a note **"Extra Question"**.

10	No marks to be deducted for the cumulative effect of an error. It should be penalized only once.
11	A full scale of marks _____ (example 0 to 80/70/60/50/40/30 marks as given in Question Paper) has to be used. Please do not hesitate to award full marks if the answer deserves it.
12	Every examiner has to necessarily do evaluation work for full working hours i.e., 8 hours every day and evaluate 20 answer books per day in main subjects and 25 answer books per day in other subjects (Details are given in Spot Guidelines).This is in view of the reduced syllabus and number of questions in question paper.
13	Ensure that you do not make the following common types of errors committed by the Examiner in the past :- • Leaving answer or part thereof unassessed in an answer book. • Giving more marks for an answer than assigned to it. • Wrong totaling of marks awarded on an answer. • Wrong transfer of marks from the inside pages of the answer book to the title page. • Wrong question wise totaling on the title page. • Wrong totaling of marks of the two columns on the title page. • Wrong grand total. • Marks in words and figures not tallying/not same. • Wrong transfer of marks from the answer book to online award list. • Answers marked as correct, but marks not awarded. (Ensure that the right tick mark is correctly and clearly indicated. It should merely be a line. Same is with the X for incorrect answer.) • Half or a part of answer marked correct and the rest as wrong, but no marks awarded.
14	While evaluating the answer books if the answer is found to be totally incorrect, it should be marked as cross (X) and awarded zero (0) Marks.
15	Any unassessed portion, non-carrying over of marks to the title page, or totaling error detected by the candidate shall damage the prestige of all the personnel engaged in the evaluation work as also of the Board. Hence, in order to uphold the prestige of all concerned, it is again reiterated that the instructions be followed meticulously and judiciously.
16	The Examiners should acquaint themselves with the guidelines given in the "**Guidelines for Spot Evaluation**" before starting the actual evaluation.
17	Every Examiner shall also ensure that all the answers are evaluated, marks carried over to the title page, correctly totaled and written in figures and words.
18	The candidates are entitled to obtain photocopy of the Answer Book on request on payment of the prescribed processing fee. All Examiners/Additional Head Examiners/Head Examiners are once again reminded that they must ensure that evaluation is carried out strictly as per value points for each answer as given in the Marking Scheme.

	மத்திய இளநிலைக் கல்விக் கழகம்	
	விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2025-2026	
	வகுப்பு : 10 தமிழ் - 006	
	மொத்த மதிப்பெண்கள் – 80	
	இருபத்து ஆறு (26) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக் கூடிய விடைத்தாள்களைத் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும்.	
	விடைகளுக்கு உரிய மதிப்பெண்கள் விடைத் தாளின் வலப்பக்கத்திலும் மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் எழுதி வட்டமிடுதல் வேண்டும். விடைகள் சரியாக எழுதியிருப்பின்(✓) என்றும் விடை தவறு எனின் (**X**) என்றும் குறியிட வேண்டும். தவறு எனின் **ZERO** என்று வலப்பக்கத்தில் எழுத்தில் எழுத வேண்டும். விடை எழுதாமல் வினா மட்டும் எழுதியிருப்பின் (**-**) இட வேண்டும்.	
	விடைத்தாளில் எழுதாத பக்கங்களை அடிக்க வேண்டும், விடைத்தாளின் முதல் மற்றும் இறுதிப் பக்கத்தில் தேர்வாளரின் கையொப்பம் ,தேர்வாளர் எண்,மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். மாணவர்	

	பெற்ற மொத்த மதிப்பெண்களை எழுதி வட்டமிடுதல் வேண்டும்.	
	தேர்வுத்தாள் உரிய தேர்வாளரால் திருத்தப்பட்ட பின் மற்றொரு தேர்வாளர் அவ்விடைத்தாளின் மதிப்பெண்களின் கூட்டுத் தொகை மற்றும் எழுதப்பட்ட சரியான விடைகளுக்கு மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துத் தங்கள் தேர்வாளர் எண், கையொப்பம் ஆகியவற்றை இட வேண்டும். திருத்தங்கள் இருப்பின் உரிய தேர்வாளரிடம் கொடுத்துத் திருத்தங்கள் செய்ய வேண்டும்.	
	புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.	
1.	வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பத்தி வினா விடைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.	5 x 1 = 5

2.	பத்தி வினா விடைகளுக்குச் சரியான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	5 x 1 = 5
3 - 6	இலக்கண விடைகள் சரியாக எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். இலக்கண வினாக்கள் ஒவ்வொரு பகுதிக்கும் 3 விடைகளுக்குப் பதிலாக 5 விடைகள் எழுதியிருப்பின் 5 இல் சரியான மூன்று விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம்.	12 x 1 = 12
7.	திருக்குறள் நிரப்புக கோடிட்ட இடத்தில் சரியான சீர் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	3 x 1 = 3
8.	செய்யுளடி வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.	5 x 1 = 5
9.	செய்யுள் வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். மூன்று மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 2 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம்.	2 x 4 = 8

10.	உரைநடை வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதியிருப்பின் 5 மதிப்பெண்கள் வழங்கலாம். பிழைகள் இருப்பின் 5 மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 3 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம்.	3 x 5 = 15
11.	துணைப்பாடக் கட்டுரை முன்னுரை ,முடிவுரை, பக்கத் தலைப்புகளின்றிச் சுருக்கமாகப் பத்தி வடிவில் எழுதியிருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவில் பிழைகளின்றி எழுதியிருப்பின் 10/10 மதிப்பெண்களும் பிழைகள் இருப்பின் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் வழங்கலாம். அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும்.	10 x 1= 10
12.	காட்சியைக் கண்டு கவினுற எழுதுக பகுதியில் படத்துக்குத் தகுந்த தலைப்புடன் 4 முதல் 5 தொடர்கள் எழுதியிருப்பின் 3/3 மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்தபட்சம் 2 மதிப்பெண்கள் வழங்கலாம்.	1 X 3 = 3

13.	கடிதம் உரிய வடிவமைப்புடன் எழுதியிருப்பின் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியாக மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் எழுதி வட்டமிடவேண்டும்.	1 X 8 = 8
14.	கட்டுரை – தலைப்பு ,முன்னுரை, தக்க உட் தலைப்புகள் , மேற்கோள்கள் எழுதியிருப்பின் அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி வட்டமிடவும்.	1 x 6 = 6
	அதிகபட்ச மதிப்பெண் **80 /80** . தகுதியான பிழைகளற்ற விடைத்தாள்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.	

SET: 4

MARKING SCHEME FOR BOARD EXAM – 2025 - 2026

மதிப்பெண் வழங்கும் முறை (X – STD – TAMIL)

வகுப்பு :10 **தமிழ் : 006**

மொத்த மதிப்பெண்கள் : 80

SECTION – A(READING) 10 MARKS

பகுதி -அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1.பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக 5 X 1 = 5

i) B) பொய்கை 1

ii) C) ஊருணி /பேரூரணி/ மயிலூரணி 1

iii) C) பொய்கையார் 1

iv) A) திருவல்லிக்கேணி 1

v) B) மடு 1

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக 5 X 1 = 5

i) **அறம் செய விரும்பு** என்பது தமிழ் மொழியின் மரபு ஆகும். 1

ii) மொழியால், மெய்யால் செய்யக்கூடிய அறங்களில் **பொய்மையும் வஞ்சனையும்** இருக்கக்கூடும். 1

iii) சிந்தனையின் நிலைக்களனாகக் கருதப்படுவது **மனம்** ஆகும். 1

iv) வாழ்க்கையில் சாதிக்க **மனத்தூய்மை** தேவை ஆகும். 1

v) செயல்கள் அனைத்திற்கும் **சிந்தனையே** அடிப்படையாகும். 1

(**குறிப்பு:** தொடராக எழுதாமல் ஓரிரு சொற்களில் விடை எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)

SECTION - B (GRAMMAR) 12 MARKS

பகுதி -ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்

3. **சான்று தருக (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) A) உறாஅர் 1

ii) A) பெரிய மீசை வந்தார் 1

iii) B) கேட்ட பாடல் 1

iv) C) செழியன் வந்தான் 1

v) D) முயல்,மான் 1

4. **நிரப்புக (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) D) பாலை 1

ii) B) எட்டு 1

iii) D) மருத நிலம் 1

iv) B)முதனிலைத் 1

v) B)கொளல் வினா 1

5.**இலக்கணக் குறிப்புத் தருக(மூன்றனுக்கு மட்டும்)**3 X 1 = 3

i) A) உவமைத்தொகை 1

ii) C) வினையாலணையும் பெயர் 1

iii) B) உரிச்சொல் தொடர் 1

iv) A) மரபு வழு 1

v) A) குறிஞ்சி நிலத்தொழில் 1

6. **கூறியவாறு செய்க (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) D) ஒற்றளபெடை 1

ii) B) வாய் 1

iii) B) மூன்றாம் வேற்றுமைத்தொகை 1

iv) C) செய்யாமலிருப்பேனா ? 1

v) A) எற்பாடு 1

SECTION - C (MAIN COURSE BOOK) 31 MARKS

பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. **பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக** 3 X 1 = 3

i) B) தொடர்கை 1

ii) B) மன்னவன் 1

iii) A) மகிழ்ந்துள்ளம் 1

8. **பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** 5 X 1 = 5

i) B) தனிப்பாடல் திரட்டு 1

ii) A) ஐம்பெருங்காப்பியங்கள் 1

iii) C) சண்முகசுந்தரம் 1

iv) B) பொருந்துதலால் / D) கிடைக்கப் பெறுதலால் 1

v) C) தமிழோடு 1

9. **பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக** 2 X 4 = 8

i) பெயர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இயற்பெயர் : துரை மாணிக்கம்

இதழ்கள்: தென்மொழி ,தமிழ்ச்சிட்டு

இயற்றிய நூல்கள் : உலகியல் நூறு, பாவியக்கொத்து,நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை என்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள்.

சிறப்பு : திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது; இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

ii) துன்பத்தைத் தரும் மாலைப்பொழுது – முதிய பெண்கள் ஊர்ப்பக்கம் செல்லுதல் – முல்லைப் பூக்களையும் நெல்லையும் நாழியில் சேர்த்தல்- தெய்வத்தைத் தொழுது

தலைவிக்காக விரிச்சி கேட்டு நிற்றல் – பசியால் வாடிய இளங்கன்றின் வருத்தத்தை இடைமகள் காணல் – புல்லை மேய்ந்து, வளைந்த கத்தியை உடைய இடையர் ஓட்டிவர உன் தாய்மார் வருவர் என்ற நற்சொல்லைக் கேட்டோம் என்று தலைவியிடம் கூறுதல்.

(குறிப்பு :கார்கால நிகழ்வு பற்றிய செய்திகள் தேவையில்லை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)

iii) பாண்டிய நாட்டு மன்னன் குலேசப் பாண்டியன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்குதல் – கபிலரின் நண்பர் இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாடுதல் – மன்னன் அவமதித்தல் – வருந்திய புலவர் இறைவனிடம் முறையிடல் – மன்னனின் பிழையை உணர்த்த, இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி வடதிருஆலவாயில் தங்குதல் – இதனை அறிந்த மன்னன் தன் பிழை உணர்தல் - புலவர்க்குச் சிறப்பு செய்தல்.

iv) கோசல நாட்டில் வறுமை இல்லை -அதனால் கொடைக்கு இடமில்லை – நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லை - உடல்வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை – பொய்மொழி இல்லை – மெய்ம்மை தனித்து விளங்கவில்லை – கேள்விச் செல்வம் மிகுந்ததால் அறியாமை இல்லை.

10. **பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** 3 X 5 = 15

i) மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் - சொல்லாய்வுக் கட்டுரைகள் நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் கட்டுரையின் சுருக்கம் நம் பாடப்பகுதி – பல்வேறு இலக்கணக் கட்டுரைகள் -மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியவர் – தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணி – உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவர்.

அவர் விளக்கிய சொல்வளம் : தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரிதாள் வகை, காய்ந்த இலை வகை, இலைக்காம்பு வகை ,அரும்புவகை , பூமடல் வகை, பூக்காம்பு வகை, இதழ் வகை , காய்வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத் தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை , மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை,வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல்வகைகளையும் விளக்கியுள்ளார்.

இந்த விடை அல்லாமல்,

பொது மக்களாலும், புல மக்களாலும் அமையப் பெறும் ஒரு மொழி- தமிழ்ப் பொது மக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர் – ஆங்கில மொழியில் இலை -Leaf-ஒரே சொல்-

வன்மை,மென்மை பற்றித் தாள், இலை.தோகை ஓலை எனத் தமிழைப் போல் பாகுபாடு செய்தாரில்லை- ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது.

அடி வகை, கிளைப்பிரிவுகள், இலை வகை, கொழுந்து வகை,பிஞ்சு வகை ,குலை வகை, கெட்டுப்போன காய்கனி வகை, மணிவகை,இளம்பயிர் வகை -இவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி எழுதியிருப்பினும் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

குறிப்பு : பாவாணர் குறித்த செய்திகளுக்கு 1 மதிப்பெண்ணும், சொல்வளம் குறித்த செய்திகளுக்கு 4 மதிப்பெண்களும் வழங்கலாம்.

ii) உலகப்போர் -அமெரிக்கா – சரண் அடையாவிட்டால் குண்டு வீசப்படும் என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்புதல் – ‘ மொகு சாஸ்ட்டு’ என விடை அனுப்புதல் – விடை தர அவகாசம் வேண்டும் என்ற பொருளை மறுக்கிறோம் என்று அமெரிக்கா பொருள் கொண்டதால்- காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நிகழ்ந்தது.

இந்த விடை அல்லாமல்.

Hundred railsleepers were washed away -தொடர்வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் - Railsleepers – தொடர் வண்டியின் போக்குவரத்துத் தண்டவாளத்தின் குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும்- உறங்கிக் கொண்டிருந்தவர் என மொழி பெயர்த்தது பிழையாகும்.

Camel என்பதன் இருபொருள் வடம் , ஒட்டகம் – ஊசி காதில் வடம் நுழையாது – வேற்றுமொழித்தொடர் – ஊசி காதில் ஒட்டகம் நுழையாது என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகின்றோம்- ஊசி காதில் நூல் நுழையுமேயன்றிக் கயிறு நுழையாது என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இவ்விரு கருத்துகளை எழுதி இருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்.

iii) இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புகளால் மனிதன் அடையும் பயன்கள் குறித்துச் செயற்கை நுண்ணறிவு பாடத்திலிருந்து எழுதியிருப்பின் 4 மதிப்பெண்களும் சிக்கல்களுக்கு 1 மதிப்பெண்ணும் வழங்கலாம்.

பொதுவான கருத்துகள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

iv) **வாழை இலை விருந்து** : தமிழர் பண்பாடு – வாழை இலைக்குத் தனித்த இடம் -தலை வாழை விருந்து தமிழர் பண்பாடு – மருத்துவப் பயன்களைத் தமிழர் அறிந்திருத்தல்- வாழை இலையின் குறுகலான பகுதி உண்பவரின் இடப்பக்கம் –இலையின் விரிந்த பகுதி வலப்பக்கம் - வலக்கையால் உணவு உண்பவர் நாம் – இலையில் இடது ஓரம் உப்பு, ஊறுகாய் ,இனிப்பு -அளவில் சிறிய உணவுகள் – வலது ஓரம் – காய்கறி, கீரை ,கூட்டு -பெரிய உணவு வகைகள், நடுவில் சோறு பரிமாறுதல் – உண்பவர் மனமறிந்து, பரிவுடன் பரிமாறுதல்.

இந்த விடை அல்லாமல்,

வாழை இலை போடும் முறை குறித்து எழுதியிருப்பின் 1 மதிப்பெண்ணும், மாணவன் வாழை இலையில் தான் உண்ட உணவைப் பற்றியும் விருந்தினரை உபசரித்து வாழை இலையில் எவ்வகை உணவு பரிமாறிய விதம் பற்றி எழுதியிருப்பினும் பொதுவாகத் தற்காலத்தில் வாழை

இலை விருந்தில் பரிமாறப்படும் உணவு வகைகள் குறித்து எழுதியிருப்பினும் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்.

v)தென்றல் (வளி) பலவித மலர்களின் நறுமணத்துடன் வண்டுகளையும் அழைத்து வருவதால், இளங்கோவடிகள் காற்றை,

"வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" என நயம்பட உரைக்கிறார்.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் எழுதிய பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்னும் சிற்றிலக்கியத்தில் பெண்ணொருத்தி,

"நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பில்

செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"

எனத் தூது செல்லத் தென்றலை அன்போடு அழைக்கிறாள்.

"நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி

நடந்த இளந்தென்றலே"

எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும், திரையிசைப் பாடல்களிலும் 'வளி' இடம் பிடித்திருக்கிறது.

குறிப்பு : இலக்கிய மேற்கோள் பாடல் குறிப்பிட வில்லையெனில் 1 மதிப்பெண் குறைத்து வழங்க வேண்டும்.

SECTION - D (NON - DETAIL) 10 MARKS

பகுதி -ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11**. துணைப்பாடம் – கட்டுரை (ஏதேனும் ஒன்று)** 1 x 10 =10

முன்னுரை – 1 மதிப்பெண், துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 8 மதிப்பெண்கள், முடிவுரை -1 மதிப்பெண்

i) முன்னுரை – இணையத் தமிழனும் சங்கப்புலவரும்
சந்தித்தல் – உவமை – உருவகம்- எடுத்துக்காட்டு உவமையணி (இணை ஒப்பு) இலக்கணை – மோனை,

எதுகை – முரண்படு மெய்ம்மை -சொல் முரண் -எதிரிணை இசைவு -பெரியார் பற்றிய அண்ணாவின் கருத்து – உச்சநிலை -முடிவுரை.

ii) முன்னுரை – மேரியின் குடும்பம் – பருத்திக்காட்டில் வேலை – உன்னால் படிக்க முடியாது – மேரியின் மன உறுதி -மிஸ் வில்சனின் உதவி – பட்டம் பெறுதல் – உயர்நிலைப் படிப்பு – ஊர் கூடி வழியனுப்புதல் – முடிவுரை.

iii) முன்னுரை – மழை மேகம் சூழ்தல் - தொங்கான் படும்பாடு – கடற்கூத்து – தொங்கான் மிதந்து சென்ற நிலை – முடிவுரை.

குறிப்பு : (மேற்கண்ட தலைப்புகளுடன் பிற பொருத்தமான தலைப்புகள் எழுதி இருப்பினும் மதிப்பெண்கள் வழங்கலாம். முன்னுரை ,முடிவுரை இன்றிப் பத்தி வடிவில் எழுதி இருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவத்துக்குக் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் பிழையற்ற கட்டுரைக்கு 10/10 மதிப்பெண்களும் வழங்கலாம்.)

SECTION -E (CREATIVE WRITING) 17 MARKS

பகுதி -உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** 1 X 3 = 3

4 அல்லது 5 தொடர்களாகவோ கவிதை வடிவிலோ எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

தலைப்பு – ½ மதிப்பெண்

தொடர்கள் – 2 ½ மதிப்பெண்கள்

13. **கடிதம் - உறவு முறை அல்லது அலுவலகக் கடிதம்**

1 X 8 = 8

உறவுமுறைக் கடிதம் (**ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உன் தம்பிக்கு முக்கிய சாலை விதிகளை விளக்கியும் கடைபிடிக்க வலியுறுத்தியும் கடிதம்**)

வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி (இடம் ,தேதி) – 1 மதிப்பெண்

விளி – ½ மதிப்பெண்

நலம் கேட்டல் - 1 மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 ½ மதிப்பெண்கள்

முடிப்பு – 1 மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

(அல்லது)

அலுவலகக் கடிதம் (மருந்தகம் ஒன்றிலிருந்து வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீர் அம்மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம்)

அனுப்புநர் – 1 மதிப்பெண் (வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி)

பெறுநர் -1 மதிப்பெண்

விளித்தல் – ½ மதிப்பெண்

பொருள் – ½ மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 மதிப்பெண்கள்

முடிப்பு – ½ மதிப்பெண்

இடம் ,தேதி - ½ மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

14. **பொதுக் கட்டுரை (ஏதேனும் ஒன்று மட்டும்)** 1 X 6 = 6

தலைப்பு – ½ மதிப்பெண்

முன்னுரை - ½ மதிப்பெண்

துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 4 மதிப்பெண்கள்

மேற்கோள் - ½ மதிப்பெண்

முடிவுரை - ½ மதிப்பெண்

குறிப்பு : கட்டுரை பிழையின்றி எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்த பட்சம் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்.

மொத்த மதிப்பெண்கள் – 80/ 80

****

Series : HF1EG

SET – 4

रोल नं.
Roll No.

प्रश्न-पत्र कोड Q.P. Code	**10**

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

தமிழ்
TAMIL

கால அளவு : 3 மணி
Time allowed : 3 hours

மொ.மதிப்பெண்கள் : 80
Maximum Marks : 80

- *இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற* **11** *பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.*
- *இந்த வினாத்தாளில்* **14** *வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.*
- *வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை* (Code No) *விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.*
- ***எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.***
- *வினாத்தாளைப் படிப்பதற்கு* 15 *நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள்* 10.15 *க்குக் கொடுக்கப்படும்* 10.15 *இல் இருந்து* 10.30 *வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.*

- Please check that this question paper contains **11** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

~

General Instructions :

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   *இவ் வினாத்தாள் **14** கேள்விகளைக் கொண்டுள்ளது.*

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   *பகுதி அ – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **1** முதல் **2** வரை]*

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   *பகுதி ஆ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **3** முதல் **6** வரை]*

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   *பகுதி இ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **7** முதல் **10** வரை]*

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   *பகுதி ஈ – **1** வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் **11**]*

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   *பகுதி உ – **3** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **12** முதல் **14** வரை]*

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

SECTION – A [Reading] 10 Marks

பகுதி – அ (படித்தல் திறன்) **10** *மதிப்பெண்கள்*

1. *பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.* **5 × 1 = 5**

மரங்கள் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரண் எனக் கூறலாம். மரங்கள் தான் மண் வளத்தைப் பேணிக்காக்கின்றன. மரங்கள் பகலில் உயிர்க்காற்றை நமக்குத் தருகின்றன. புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன. ஆனால் மனிதன் தம் சுயநலத்திற்காக மரங்களை வெட்டி அதிலிருந்து காகிதம், இரப்பர், கோந்து, மேஜை, நாற்காலி போன்ற அழகிய மரப்பொருட்களை செய்து விற்கின்றான். இதனால் மனிதர் எதிர்கொள்ளப்போகும் துயரங்கள் ஏராளம். இந்தியாவில் 60 சதவீதம் மரம் இருக்க வேண்டும்.

அசோகச் சக்கரவர்த்தி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரத்தின் அருமையை உணர்ந்து சாலையின் இரு மருங்கிலும் எண்ணற்ற மரங்களை நட்டார். எனவே நாமும் மரம் வளர்ப்போம். அரசாங்கமே ஒருவர் பத்து மரம் வளர்க்க வேண்டும் எனச் சொல்கிறது. மரங்கள் மனிதருக்கு மட்டும் அல்லாது எண்ணற்ற உயிர்களுக்கும் அரணாக உள்ளது. மரங்கள் பல மருத்துவ குணங்கள் வாய்ந்தவை.

வினாக்கள்:

(i) *மரங்களில் இருந்து நமக்கு கிடைக்கும் பொருட்கள் என்னென்ன?*

(A) *காகிதம், மேசை* (B) *காகிதம், சுண்ணாம்பு*

(C) *மேசை, கண்ணாடி* (D) *இரப்பர், தகரம்*

(ii) *அசோகச் சக்கரவர்த்தியின் செயல் யாது?*

(A) *ஊர் தோறும் மரம் நட்டார்*

(B) *சாலையின் இரு மருங்கிலும் மரம் நட்டார்*

(C) *மரங்களை வெட்டி பொருட்கள் செய்தார்*

(D) *காடு, மலைகளில் மரம் நட்டார்*

(iii) மரங்களை எவ்வாறு அழைக்கலாம்?

(A) பாதுகாப்பு வளையம் (B) வேலி

(C) கோட்டை (D) அரண்

(iv) மரங்கள் நமக்கு எக்காற்றைத் தருகின்றன?

(A) கரியமில வாயு (B) உயிர்க்காற்று

(C) ஹைட்ரஜன் வாயு (D) நைட்ரஜன் வாயு

(v) மரங்கள் எதைப் பேணி பாதுகாக்கின்றன?

(A) காட்டு வளம் (B) செம்மண் வளம்

(C) மண் வளம் (D) வண்டல் மண் வளம்

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

சிலப்பதிகாரம், புகாரில் நெடுநிலை மாடங்கள் பல இருந்ததையும் அழகான வேலைப்பாடுகளோடு கூடிய சாளரங்கள் மாளிகையில் பொருத்தப்பட்டிருந்ததையும், சரக்குகள் நிறைந்த பண்டகச் சாலைகளையும், மாளிகைகளில் நிலா முற்றம் அமைக்கப்பட்டு இருந்ததையும் குறிப்பிடுகின்றது. மதுரை நகரிலும் மாடங்கள் நிறைந்திருந்தன. 'நான்மாடக்கூடல்', 'சேய்மாடக்கூடல்' 'நீள்மாடக்கூடல்,' 'நெடுமாடக்கூடல்' என்ற அடைகளால் பல மாடங்கள் வானோக்கி வளர்ந்த கட்டடப் போக்கினை பெற்றிருந்ததை அறியலாம். மதுரையில் நீளமான வாயில் நெடுங்கதவோடு அமைந்திருந்தது. மன்னன் பேரிசைக் கோவிலும், கடவுளர் கோவில்களும், பள்ளிகளும் அங்கே சிறந்து விளங்கின. சேரநாட்டின் தலைநகரமான வஞ்சியில் சேரன், வேண் மாளுடன் வெள்ளி மாடத்தில் இருந்தானெனச் சிலம்பு கூறுகிறது. வஞ்சியில் மன்றங்களும் சதுக்கங்களும் நிறைந்து இருந்தன என மணிமேகலை கூறுகின்றது

வினாக்கள்:

(i) நீள்மாடக்கூடல் அமைந்த இடம் எது?

(ii) பண்டகச் சாலைகளில் எவை நிறைந்து இருந்தன?

(iii) மாளிகைகளில் எது அமைக்கப்பட்டிருந்தது என சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது?

(iv) மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கியவை எவை?

(v) சேர நாட்டின் தலைநகரம் எது?

SECTION – B [Grammar] 12 Marks

பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) பாலைத்திணைக்குரிய தொழில்

(A) ஆநிரை மேய்த்தல் (B) உழவுத்தொழில்

(C) நிரை கவர்தல் (D) மீன் பிடித்தல்

(ii) கொளல் வினா

(A) ஒரு பொருளை வாங்கும் பொருட்டு வினவும் வினா

(B) ஒரு பொருளை வழங்கும் பொருட்டு வினவும் வினா

(C) ஒரு பொருளை யாசிக்கும் பொருட்டு வினவும் வினா

(D) ஒரு பொருளை களவாடும் பொருட்டு வினவும் வினா

(iii) முன்னிலைப் பெயர்கள்

(A) அவன், அவர்கள் (B) நான், நாங்கள்

(C) யான், யாம் (D) நீர், நீவிர்

(iv) உரிச்சொல் தொடர்

(A) அவரே சொன்னார் (B) பாடினாள் விமலா

(C) சாலப்புகழ்ந்தான் (D) கண்ணா வா!

(v) வேற்றுமைத் தொகை

(A) ஊறுகாய் (B) மொழிகற்றான்

(C) இந்திய நாடு (D) கார்குழல்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. (மூன்று மட்டும்) **3 × 1 = 3**

(i) தொகை நிலைத் தொடர்கள் இல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது _____

(A) வினைத்தொகை (B) பண்புத் தொகை

(C) உம்மைத் தொகை (D) அன்மொழித் தொகை

(ii) அளபெடை _____ வகைப்படும்

(A) மூன்று (B) இரண்டு

(C) நான்கு (D) ஐந்து

(iii) அகம், புறம் ஆகிய இரண்டும் _____இலக்கணம் ஆகும்.

(A) எழுத்து (B) சொல்

(C) பொருள் (D) யாப்பு

(iv) தலை வலிக்கிறது _____ விடை

(A) உறுவது கூறல் (B) உற்றது உரைத்தல்

(C) ஐய வினா (D) இனமொழி

(v) உயர்திணைக்குரிய பால் பிரிவுகள் _____

(A) ஆண்பால், பெண்பால்

(B) ஆண்பால், பெண்பால், பலர்பால்

(C) ஒன்றன்பால்

(D) பலவின்பால்

5. இலக்கணக் குறிப்பு தருக : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) வாரா

(A) வினைத்தொகை

(B) விளத்தொடர்

(C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(D) தொழிற்பெயர்

(ii) உரனசை இ

(A) செய்யுளிசை அளபெடை (B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(iii) கைதொழுது

(A) உவமைத்தொகை (B) வேற்றுமைத் தொகை

(C) பண்புத் தொகை (D) வினைத்தொகை

(iv) அத்திக்காய்

(A) தனிமொழி (B) தொடர்மொழி

(C) பொதுமொழி (D) இனமொழி

(v) இரவு பகல்

(A) எண்ணும்மை (B) உம்மைத்தொகை

(C) பெயரெச்சத்தொடர் (D) வினையெச்சத் தொடர்

6. கூறியவாறு செய்க : *(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)* **3 × 1 = 3**

(i) நாயால் கடியுண்டான் – முதனிலைத் தொழிற்பெயரை எடுத்து எழுதுக.

(A) நாய் (B) கடி

(C) ஆல் (D) உண்டான்

(ii) மருதத்திணைக்குரிய பெரும் பொழுதைக் கூறு.

(A) கார்காலம் (B) இளவேனிற்காலம்

(C) குளிர்காலம் (D) ஆறு பொழுதுகள்

(iii) ஆட வருமா? இத்தொடரை இனமொழி விடையாக்குக.

(A) ஆடவரும் (B) ஆட வராது

(C) தலை வலிக்கும் (D) பாட வரும்

(iv) இன்று வருவான் – கால வழுவை நீக்கி எழுதுக.

(A) நேற்று வருவான் (B) இன்று வருகின்றான்

(C) நாளை வருவான் (D) நேற்று வந்தான்

(v) அப்துல்லா – பெயரெச்சத் தொடராக மாற்றுக.

(A) வந்த அப்துல்லா (B) அப்துல்லா வந்தான்

(C) வந்தான் அப்துல்லா (D) வருவான் அப்துல்லா

SECTION – C (Main Course Book) 31 Marks
பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. **2 × 1 = 2**

(i) சொல்லப் பயன்படுவர் _____ கரும்பு போல்
கொல்லப் பயனப்டும் கீழ்

(A) பெரியோர் (B) சிறியோர்

(C) சான்றோர் (D) ஈன்றோர்

(ii) நச்சப் படாதவன் செல்வம் _____
நச்சு மரம்பழுத் தற்று.

(A) நடுஊருள் (B) பொதுஊருள்

(C) வெளியூருள் (D) நல்லூரில்

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருந்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று"

(i) இப்பாடலில் பெருமை படுத்தப்படுவது எது?

(A) செல்வம் (B) கல்வி

(C) நட்பு (D) இரக்கம்

(ii) இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல் _____

(A) பூத்தொடுத்தல் (B) பரிபாடல்

(C) மலைபடுகடாம் (D) நீதிவெண்பா

(iii) மருள் – என்பதன் பொருள்

(A) இருள் (B) அருள்

(C) மயக்கம் (D) பயம்

(iv) செய்குதம்பிப் பாலவர் _____மாவட்டத்தில் பிறந்தார்

(A) தூத்துக்குடி (B) மன்னார்குடி

(C) ஈரோடு (D) கன்னியாகுமரி

(v) செய்குதம்பிப் பாலவர் எவ்வாறு பாராட்டப் பெற்றார்?

(A) கவிச் சக்கரவர்த்தி (B) சதாவதானி

(C) பாவேந்தர் (D) புரட்சிக்கவிஞர்

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 3 = 9**

(i) சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் பற்றி கூறுக.

(ii) நவீன கவிதைளில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

(iii) பக்தி இலக்கியங்களில் எவ்வாறு அறிவியல் கருத்துகள் செறிந்திருந்தன?

(iv) தினைச்சோறு விருந்தைப் பற்றி எழுதுக.

(v) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 5 = 15**

(i) தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.

(ii) விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு மாறியுள்ளது என்பதை விரிவாக எழுதுக.

(iii) செயற்கை நுண்ணறிவு கணினி மற்றும் மென்பொருள் இயந்திர மனிதன் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(iv) மொழிபெயர்ப்பு கல்வி குறித்து எழுதுக.

(v) கூத்துப்பட்டறை ந. முத்துசாமி பற்றி எழுதுக.

SECTION – D (Non-Detail) 10 Marks

பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 10 = 10**

(i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

(ii) கோபல்லபுரத்து மக்கள்

(iii) பாய்ச்சல்

SECTION – E (Creative Writing) 17 Marks

பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **1 × 3 = 3**



For Visually impaired Candidates

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

(ii) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. **1 × 8 = 8**

(i) நீர் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி நும் பெற்றோருக்குக் கடிதம் எழுதுக.

***(அல்லது)* (OR)**

(ii) உம் பகுதியில் மின்சாரம் தடைபடுவதைத் தவிர்க்கக் கோரி மின்வாரிய ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் நும் முகவரி இ. பர்கனா / இ. பாசித்அலி, எண். 32, கந்தன் தெரு மதுரை – 600 302.

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – இளமையில் கல் – கற்றோரின்

சிறப்பு – வள்ளுவர் வாக்கு – கல்லாமை

குற்றம் – அழியாச் செல்வம் – வாழ

வைக்கும் கல்வி – முடிவுரை

(ii) முன்னுரை – உண்மையின் இலக்கணம் –

வாய்மையின் உயர்வு – முடிவுரை

(iii) முன்னுரை – திரைப்படம் தோற்றமும்

வளர்ச்சியும் – படக்காட்சியால் பெறும்

நன்மைகள் – தீமைகள் – முடிவுரை



Marking Scheme

Strictly Confidential

(For Internal and Restricted use only)

Secondary School Examination, 2025

SUBJECT NAME TAMIL (Q.P. CODE 10)-006 SET-4

General Instructions: -

1	You are aware that evaluation is the most important process in the actual and correct assessment of the candidates. A small mistake in evaluation may lead to serious problems which may affect the future of the candidates, education system and teaching profession. To avoid mistakes, it is requested that before starting evaluation, you must read and understand the spot evaluation guidelines carefully.
2	**"Evaluation policy is a confidential policy as it is related to the confidentiality of the examinations conducted, Evaluation done and several other aspects. Its' leakage to public in any manner could lead to derailment of the examination system and affect the life and future of millions of candidates. Sharing this policy/document to anyone, publishing in any magazine and printing in News Paper/Website etc may invite action under various rules of the Board and IPC."**
3	Evaluation is to be done as per instructions provided in the Marking Scheme. It should not be done according to one's own interpretation or any other consideration. Marking Scheme should be strictly adhered to and religiously followed. **However, while evaluating, answers which are based on latest information or knowledge and/or are innovative, they may be assessed for their correctness otherwise and due marks be awarded to them. In class-X, while evaluating two competency-based questions, please try to understand given answer and even if reply is not from marking scheme but correct competency is enumerated by the candidate, due marks should be awarded.**
4	The Marking scheme carries only suggested value points for the answers These are in the nature of Guidelines only and do not constitute the complete answer. The students can have their own expression and if the expression is correct, the due marks should be awarded accordingly.
5	The Head-Examiner must go through the first five answer books evaluated by each evaluator on the first day, to ensure that evaluation has been carried out as per the instructions given in the Marking Scheme. If there is any variation, the same should be zero after delibration and discussion. The remaining answer books meant for evaluation shall be given only after ensuring that there is no significant variation in the marking of individual evaluators.
6	Evaluators will mark(√) wherever answer is correct. For wrong answer CROSS 'X" be marked. Evaluators will not put right (✓) while evaluating which gives an impression that answer is correct and no marks are awarded. **This is most common mistake which evaluators are committing.**

7	If a question has parts, please award marks on the right-hand side for each part. Marks awarded for different parts of the question should then be totaled up and written in the left-hand margin and encircled. This may be followed strictly.
8	If a question does not have any parts, marks must be awarded in the left-hand margin and encircled. This may also be followed strictly.
9	If a student has attempted an extra question, answer of the question deserving more marks should be retained and the other answer scored out with a note **"Extra Question"**.
10	No marks to be deducted for the cumulative effect of an error. It should be penalized only once.
11	A full scale of marks _____(example 0 to 80/70/60/50/40/30 marks as given in Question Paper) has to be used. Please do not hesitate to award full marks if the answer deserves it.
12	Every examiner has to necessarily do evaluation work for full working hours i.e., 8 hours every day and evaluate 20 answer books per day in main subjects and 25 answer books per day in other subjects (Details are given in Spot Guidelines).This is in view of the reduced syllabus and number of questions in question paper.
13	Ensure that you do not make the following common types of errors committed by the Examiner in the past:- ● Leaving answer or part thereof unassessed in an answer book. ● Giving more marks for an answer than assigned to it. ● Wrong totaling of marks awarded on an answer. ● Wrong transfer of marks from the inside pages of the answer book to the title page. ● Wrong question wise totaling on the title page. ● Wrong totaling of marks of the two columns on the title page. ● Wrong grand total. ● Marks in words and figures not tallying/not same. ● Wrong transfer of marks from the answer book to online award list. ● Answers marked as correct, but marks not awarded. (Ensure that the right tick mark is correctly and clearly indicated. It should merely be a line. Same is with the X for incorrect answer.) ● Half or a part of answer marked correct and the rest as wrong, but no marks awarded.
14	While evaluating the answer books if the answer is found to be totally incorrect, it should be marked as cross (X) and awarded zero (0)Marks.
15	Any un assessed portion, non-carrying over of marks to the title page, or totaling error detected by the candidate shall damage the prestige of all the personnel engaged in the evaluation work as also of the Board. Hence, in order to uphold the prestige of all concerned, it is again reiterated that the instructions be followed meticulously and judiciously.
16	The Examiners should acquaint themselves with the guidelines given in the "**Guidelines for spot Evaluation**" before starting the actual evaluation.
17	Every Examiner shall also ensure that all the answers are evaluated, marks carried over to the title page, correctly totaled and written in figures and words.

18	The candidates are entitled to obtain photocopy of the Answer Book on request on payment of the prescribed processing fee. All Examiners/Additional Head Examiners/Head Examiners are once again reminded that they must ensure that evaluation is carried out strictly as per value points for each answer as given in the Marking Scheme.

	மத்திய இளநிலைக் கல்விக் கழகம்	
	விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2025	
	வகுப்பு : 10 தமிழ் - 006	
	மொத்த மதிப்பெண்கள் – 80	
	இருபத்து ஆறு (26) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக் கூடிய விடைத்தாள்களைத் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும்.	
	விடைகளுக்கு உரிய மதிப்பெண்கள் விடைத் தாளின் வலப் பக்கத்திலும் மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் எழுதி வட்டமிடுதல் வேண்டும். விடைகள் சரியாக எழுதியிருப்பின்(✓) என்றும் விடை தவறு எனின் (**X**) என்றும் குறியிட வேண்டும். தவறு எனின் **ZERO** என்று வலப்பக்கத்தில் எழுத்தில் எழுத வேண்டும். விடை எழுதாமல் வினா மட்டும் எழுதியிருப்பின் (**-**) இட வேண்டும்.	
	விடைத்தாளில் எழுதாத பக்கங்களை அடிக்க வேண்டும், விடைத்தாளின் முதல் மற்றும் இறுதிப்	

	பக்கத்தில் தேர்வாளரின் கையொப்பம் ,தேர்வாளர் எண்,மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களை எழுதி வட்டமிடுதல் வேண்டும்.	
	தேர்வுத்தாள் உரிய தேர்வாளரால் திருத்தப்பட்ட பின் மற்றொரு தேர்வாளர் அவ்விடைத்தாளின் மதிப்பெண்களின் கூட்டுத் தொகை மற்றும் எழுதப்பட்ட சரியான விடைகளுக்கு மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துத் தங்கள் தேர்வாளர் எண், கையொப்பம் ஆகியவற்றை இட வேண்டும். திருத்தங்கள் இருப்பின் உரிய தேர்வாளரிடம் கொடுத்துத் திருத்தங்கள் செய்ய வேண்டும்.	
	புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.	
1.	வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பத்தி	5 x 1 = 5

	வினா விடைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.	
2.	பத்தி வினா விடைகளுக்குச் சரியான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	5 x 1 = 5
3 – 6	இலக்கண விடைகள் சரியாக எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். இலக்கண வினாக்கள் ஒவ்வொரு பகுதிக்கும் 3 விடைகளுக்குப் பதிலாக 5 விடைகள் எழுதியிருப்பின் 5 இல் சரியான மூன்று விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம்.	12 x 1 = 12
7.	திருக்குறள் நிரப்புக கோடிட்ட இடத்தில் சரியான சீர் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.	2 x 1 = 2
8.	செய்யுளடி வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.	5 x 1 = 5
9.	செய்யுள் வினாக்களுக்குப் பொருத்தமான விடை	

	எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். மூன்று மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 2 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம்.	3 x 3 = 9
10.	உரைநடை வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதியிருப்பின் 5 மதிப்பெண்கள் வழங்கலாம். பிழைகள் இருப்பின் 5 மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 3 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம்.	3 x 5 = 15
11.	துணைப்பாடக் கட்டுரை முன்னுரை ,முடிவுரை, பக்கத் தலைப்புகளின்றிச் சுருக்கமாகப் பத்தி வடிவில் எழுதியிருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவில் பிழைகளின்றி எழுதியிருப்பின் 10/10 மதிப்பெண்களும் பிழைகள் இருப்பின் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் வழங்கலாம். அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும்.	10 x 1= 10
12.		

	காட்சியைக் கண்டு கவினுற எழுதுக பகுதியில் படத்துக்குத் தகுந்த தலைப்புடன் 4 முதல் 5 தொடர்கள் எழுதியிருப்பின் 3/3 மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்தபட்சம் 2 மதிப்பெண்கள் வழங்கலாம்.	1 X 3 = 3
13.	கடிதம் உரிய வடிவமைப்புடன் எழுதியிருப்பின் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியாக மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் எழுதி வட்டமிடவேண்டும்.	1 X 8 = 8
14.	கட்டுரை – தலைப்பு ,முன்னுரை, தக்க உட் தலைப்புகள் , மேற்கோள்கள் எழுதியிருப்பின் அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி வட்டமிடவும்.	1 x 6 = 6
	அதிகபட்ச மதிப்பெண் **80 /80** . தகுதியான பிழைகளற்ற விடைத்தாள்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.	

SET: 4

MARKING SCHEME FOR BOARD EXAM – 2024 - 2025

மதிப்பெண் வழங்கும் முறை (X – STD – TAMIL)

வகுப்பு :10 **தமிழ் : 006**

மொத்த மதிப்பெண்கள் : 80

SECTION – A(READING) 10 MARKS

பகுதி -அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1.பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக 5 X 1 = 5

i) A) காகிதம் , மேசை 1

ii) B) சாலையின் இரு மருங்கிலும் மரம் நட்டார். 1

iii) D) அரண் 1

iv) B) உயிர்க்காற்று 1

v) C) மண் வளம் 1

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக 5 X 1 = 5

i) நீள்மாடக்கூடல் அமைந்த இடம் **மதுரை.** 1

ii) பண்டகச் சாலைகளில் **சரக்குகள்** நிறைந்திருந்தன. 1

iii) மாளிகைகளில் **நிலா முற்றம்** அமைக்கப்பட்டிருந்தது. 1

iv) மன்னர்கள் காலத்தில் **பேரிசைக் கோவிலும் கடவுளர் கோவில்களும் பள்ளிகளும்** சிறந்து விளங்கின. 1

v) சேர நாட்டின் தலைநகரம் **வஞ்சி மாநகரம்**. 1

SECTION - B (GRAMMAR) 12 MARKS

பகுதி -ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்

3. **சான்று தருக (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) C) நிரை கவர்தல் 1

ii) A) ஒரு பொருளை வாங்கும் பொருட்டு வினவும் வினா 1

iii) D) நீர், நீவிர் 1

iv) C) சாலப் புகழ்ந்தான் 1

v) B) மொழி கற்றான் 1

4. **நிரப்புக (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) D) அன்மொழித்தொகை 1

ii) B) இரண்டு 1

iii) C) பொருள் 1

iv) B) உற்றது உரைத்தல் 1

v) B) ஆண்பால், பெண்பால் ,பலர்பால் 1

5.**இலக்கணக் குறிப்புத் தருக(மூன்றனுக்கு மட்டும்)**3 X 1 = 3

i) C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பதே சரியான விடை எனினும் பத்தாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்னும் இலக்கணப் பகுதி இல்லாததால் A, B, C, D இவற்றுள் எவ்விடை எழுதியிருப்பினும் 1 மதிப்பெண் வழங்கலாம். 1

ii) C) சொல்லிசை அளபெடை 1

iii) B) வேற்றுமைத் தொகை 1

iv) C) பொதுமொழி என்பதே சரியான விடை எனினும் **அத்திக்காய்** எனத் தனித்து நிற்பதால் A) தனிமொழி எனவும் C) பொதுமொழி எனவும் எழுதி இருப்பின் 1 1 மதிப்பெண் வழங்கலாம்.

v) B) உம்மைத்தொகை 1

6. **கூறியவாறு செய்க (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) B) கடி 1

ii) D) ஆறு பொழுதுகள் 1

iii) D) பாட வரும் 1

iv) B) இன்று வருகின்றான் என்பதே சரியான விடை எனினும் கால வழுவை நீக்கி எழுதுக எனக் கேட்கப்பட்டதால் C) நாளை வருவான் D) நேற்று வந்தான் என்ற விடைகளும் கால வழா நிலையாக இருப்பதால் அவற்றுக்கும் 1 1 மதிப்பெண் வழங்கலாம்.

v) A) வந்த அப்துல்லா 1

SECTION - C (MAIN COURSE BOOK) 31 MARKS

பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. **பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக** 2 X 1 = 2

i) C) சான்றோர் 1

ii) A) நடு ஊருள் 1

8**. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** 5 X 1 = 5

i) B) கல்வி 1

ii) D) நீதி வெண்பா 1

iii) C) மயக்கம் 1

iv) D) கன்னியாகுமரி 1

v) B) சதாவதானி 1

9. **பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** 3 X 3 = 9

i) **சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்**

ஏடாளும் புலவர் ஒருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்.

களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்.

அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.

உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.

கண் விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பாமழை பொழிந்தார்.

அப்பாடல் – ' மாசற விசித்த வார்புறு வள்பின்'

இவ்விடை எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

குறிப்பு: திருவிளையாடற் புராணம் **(பாடல் -8)**

'விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம் '

என்னும் அடியில் வில்லேர் உழவனாகிய குலேச பாண்டியன் சொல்லேருழவனாகிய புலவர் இடைக்காடனாருக்குக் கவரி வீசி சிறப்புச் செய்ததாக வருவதால்,

மன்னரது மாளிகை , வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது.

அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரணக் கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது.

போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது.

அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன்னிருக்கையில் விதிப்படி அமர்த்திச் சிறப்புச் செய்தான்.

என இவ்விடை எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

ii) **நவீன கவிதை, நாட்டுப்புறக் கவிதை – ஒப்பீடு**

நவீன கவிதை

இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும். தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும். வாசலில் மரணம் நிற்பது அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை எப்படித் தொடுக்க நான்.

நாட்டுப்புறக் கவிதை

கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்
காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு
வெம்பி விடுமென்று சொல்லி
தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்
தாங்கி மலரெடுத்தார்.
இவ்வாறு ஒப்பிட்டு எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

குறிப்பு : பூத்தொடுத்தல் பாடற் கருத்தினை மட்டும் முழுமையாக எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

iii) **பக்தி இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள்**

மருத்துவரை நேசித்தல் :
மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

இறைவன் அருளை எதிர்பார்த்தல் :
இறைவா! நீ உன் விளையாட்டால் எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் நோயாளியைப் போல உன் அருளை எதிர்பார்த்து வாழ்கிறேன்.

இவ்விடை எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

குறிப்பு : அறிவியல் கருத்துகள் எனக் கேட்கப்பட்டதால் பரிபாடல் பாடற் கருத்தான,

எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.

உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதம் உருவாகியது .

அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்தன .

பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.

மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் இப்பெரிய புவி மூழ்கி உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.

இச்சூழல் மாற்றத்தினால் உயிர்கள் தோன்றி நிலை பெற்று வாழ்கின்றன.

புவி உருவாகிய நிகழ்வை அறிவியல் அறிஞர்கள் கண்டறியும் முன்பே நம் தமிழர் கண்டறிந்தனர் என்பது தமிழருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியும் பெருமைக்குரிய செயலுமாகும்.

இவ்விடைக்கும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

மாணிக்கவாசகர் கருத்து

அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால் வீதிகள் உள்ளன.

வெளியே எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.

வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.

1300 ஆண்டுகளுக்கு முன் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் திரு அண்டப்பகுதியில்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
....
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்"

– என்ற அடிகள் பால்வீதிகள் பற்றிய கருத்துகளைக் கூறுகின்றன . இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல பால்வீதிகள் நுண்மையாக இருக்கின்றன எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

iv) **தினைச்சோறு விருந்து**

வழிகாட்டல் :
பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

நன்னனின் கூத்தர்கள் :
பகைவரே இல்லாமல் ஆட்சிசெய்பவன், பகை வந்தாலும் எதிர்கொள்ளும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

இன் சொற்கள் :
நீங்கள் உரிமையுடன் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்களும் உங்களிடம், உறவினர் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

உணவு : நெய்யில் வெந்த மாமிசம், தினைச்சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விடைக்கு 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

குறிப்பு : இவ்வினாவில் நூல் பெயர் ,ஆசிரியர் பெயர் குறிப்பிடாமல் பொதுவாகத் தினைச்சோறு விருந்து எனக் கேட்கப்பட்டதால் வீட்டிற்கு வந்த விருந்தினரை முகமன் சொற்கள் கூறி, தினைச் சோறு விருந்து அளித்ததாக மாணவர்கள் எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

v) **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள்**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.

நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.

முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, வீட்டிற்குள் வருக' என்று வரவேற்று, அவர் எதிரில் நின்று, அவர் முன் மனம் மகிழும்படிப் பேசுதல் வேண்டும்.

அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்.

வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும். மேற்கண்ட செயல்கள் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களாகக் காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளன .

குறிப்பு : பொதுவாக விருந்தினரை உபசரித்து முகமன் சொற்கள் தாம் கூறியதாக எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

10. **பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** 3 X 5 = 15

i) **தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகள்**

கிளைப் பிரிவுகள்

கவை – அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை

கொம்பு அல்லது கொப்பு – கவையின் பிரிவு

கிளை -கொம்பின் பிரிவு

சினை – கிளையின் பிரிவு

போத்து – சினையின் பிரிவு

குச்சி – போத்தின் பிரிவு

இணுக்கு – குச்சியின் பிரிவு

குறிப்பு: தாவரங்களின் அடிவகை பற்றி எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

ii) **விருந்தோம்பல் அன்றும் இன்றும்**

அன்று : புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்றனர்.

திருமணம் ,புதுமனை புகுவிழா போன்ற விழாக்களை இல்லத்திலேயே கொண்டாடி விருந்தினர்களைப் போற்றினர்.

பண்டையத் தமிழர் உள்ளங்களில் விருந்தோம்பும் பண்பும் இல்லங்களில் விருந்தோம்பும் இயல்பும் செழித்திருந்தன .

இன்று : புதியவர்களை விருந்தினராக ஏற்பதே இல்லை.

அனைத்து இல்லம் சார்ந்த விழாக்களும் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டன.

அனைத்து விழாக்களும் விருந்தோம்பலும் திருமண ஏற்பாட்டாளர்களால் செய்யப்படுகின்றன .

iii) **செயற்கை நுண்ணறிவு கணினி மற்றும் மென்பொருள் இயந்திர மனிதன்**

பெப்பர் - ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.

இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.

வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.

இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன.

பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

இலா:

பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.

ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.

அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

வாட்சன்

2016 இல் ஐ.பி. எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன்.

சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

வேர்டுஸ்மித்:

இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித்.

இதற்கு எழுத்தாளி என்று பெயர்.

இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்கித் தரும்.

குறிப்பு: மின்னணுப் புரட்சிக் கருத்துகள் மற்றும் தற்காலத்தில் மாணவர்கள் அறிந்த செயற்கை நுண்ணறிவு இயந்திரம், ரோபோக்களின் செயல்பாடுகள் குறித்து எழுதி இருப்பினும் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்

iv) **மொழிபெயர்ப்புக் கல்வி**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதில் பெறலாம்.

பல அறிவுத்துறைகளுக்கும் தொழிற் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

வேலை வாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும் . நாடு,இனம், மொழி என எல்லையைக் கடந்து ஓருலகத்தன்மையைப் பெற முடியும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன.

பிறநாட்டுத் தூதரகங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை மக்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனே தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றன

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் பிறநாட்டு மொழிகளைக் கற்கலாம். சில தனியார் நிறுவனங்களும் பிற நாட்டு மொழிகளைக் கற்பிக்கின்றன.

இவ்விடைக்கு 5 மதிப்பெண்கள் வழங்கலாம்

குறிப்பு : இவற்றுடன் மொழிபெயர்ப்புக் கல்வி என்பது பாடத்தலைப்பாக இருப்பதால் அதிலுள்ள எக்கருத்துகள் எழுதி இருப்பினும் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்.

v) **கூத்துப்பட்டறை ந. முத்துசாமி - பற்றி எழுதுக**

தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.

'நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர்.

இவர் தமிழ்நாட்டின் வழி வழி நாடக முறையான கூத்துக் கலையின் ஒப்பனை முறை ,கதை சொல்லும் முறை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு புது விதமான நாடகங்களை உருவாக்கியவர்.

அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர்.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக , அரசியல் மாற்றங்களைப் பேசின.

இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

இந்திய அரசின் தாமரைத்திரு விருது (பத்மஶ்ரீ)

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

குறிப்பு : தெருக்கூத்துக் கலை பற்றிய கருத்துகளுடன் தெருக்கூத்தைத் தமிழ்க் கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.

'நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர் என எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

SECTION - D (NON - DETAIL) 10 MARKS

பகுதி -ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11**. துணைப்பாடம் – கட்டுரை (ஏதேனும் ஒன்று)** 1 x 10 =10

முன்னுரை – 1 மதிப்பெண், துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 8 மதிப்பெண்கள், முடிவுரை -1 மதிப்பெண்

i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை – முன்னுரை – ஸ்டீபன் ஹாக்கின் தோற்றம் – கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கின் கருத்து – அறிவியல் கோட்பாடு - ஸ்டீபன் ஹாக்கின் பெற்ற விருதுகள் – முடிவுரை.

ii) கோபல்லபுரத்து மக்கள் – முன்னுரை – அதிகாலை கிராமத்துக் காட்சி – அன்னமய்யா வாலிபனைச் சந்தித்தல்- அன்னமய்யாவின் செயல் – விருந்தோம்பும் பண்பு – சுப்பையா புஞ்சைக்குச் செல்லுதல் – முடிவுரை

iii) முன்னுரை – அழகு கண்ட காட்சி – அனுமார் செயல்கள் – அனுமார் பாய்ச்சல் – அழகின் அனுமார் ஆட்டம் – முடிவுரை

குறிப்பு : (மேற்கண்ட தலைப்புகளுடன் பிற பொருத்தமான தலைப்புகள் எழுதி இருப்பினும் மதிப்பெண்கள் வழங்கலாம். முன்னுரை ,முடிவுரை இன்றிப் பத்தி வடிவில் எழுதி இருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவத்துக்குக் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் பிழையற்ற கட்டுரைக்கு 10/10 மதிப்பெண்களும் வழங்கலாம்.)

SECTION -E (CREATIVE WRITING) 17 MARKS

பகுதி -ஊ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** 1 X 3 = 3

4 அல்லது 5 தொடர்கள் எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

தலைப்பு – ½ மதிப்பெண்

தொடர்கள் – 2 ½ மதிப்பெண்கள்

13. **கடிதம் - உறவு முறை அல்லது அலுவலகக் கடிதம்**

1 X 8 = 8

உறவுமுறைக் கடிதம் (**சுற்றுலா செல்ல அனுமதி வேண்டிப் பெற்றோருக்குக் கடிதம்**)

வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி (இடம் ,தேதி) – 1 மதிப்பெண்

விளி – ½ மதிப்பெண்

நலம் கேட்டல் - 1 மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 ½ மதிப்பெண்கள்

முடிப்பு – 1 மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

(அல்லது)

அலுவலகக் கடிதம் (மின்சாரத் தடையைத் தவிர்க்க வேண்டிக் கடிதம்)

அனுப்புநர் – 1 மதிப்பெண் (வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி)

பெறுநர் -1 மதிப்பெண்

விளித்தல் – ½ மதிப்பெண்

பொருள் – ½ மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 மதிப்பெண்கள்

முடிப்பு – ½ மதிப்பெண்

இடம் ,தேதி - ½ மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

14. **பொதுக் கட்டுரை (ஏதேனும் ஒன்று மட்டும்)** 1 X 6 = 6

தலைப்பு – ½ மதிப்பெண்

முன்னுரை - ½ மதிப்பெண்

துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 4 மதிப்பெண்கள்

மேற்கோள் - ½ மதிப்பெண்

முடிவுரை - ½ மதிப்பெண்

குறிப்பு : கட்டுரை பிழையின்றி எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்த பட்சம் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்.

மொத்த மதிப்பெண்கள் – 80/ 80

****

Series #CDBA

SET-4

प्रश्न–पत्र कोड
Q.P. Code **10**

रोल नं.
Roll No.

परीक्षार्थी प्रश्न–पत्र कोड को उत्तर–पुस्तिका के मुख–पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- *இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற* **15** *பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.*
- *இந்த வினாத்தாளில்* **14** *வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.*
- *வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை* (Code No) *விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.*
- *எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.*
- *வினாத்தாளைப் படிப்பதற்கு* 15 *நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள்* 10.15 *க்குக் கொடுக்கப்படும்* 10.15 *இல் இருந்து* 10.30 *வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.*
- Please check that this question paper contains **15** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

தமிழ்
TAMIL

கால அளவு : 3 மணி
Time allowed : 3 hours

மொ.மதிப்பெண்கள் : 80
Maximum Marks : 80

General Instructions :

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   இவ் வினாத்தாள் 14 கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   பகுதி அ – 2 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 1 முதல் 2 வரை]

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   பகுதி ஆ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 3 முதல் 6 வரை]

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   பகுதி இ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 7 முதல் 10 வரை]

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   பகுதி ஈ – 1 வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் 11]

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   பகுதி உ – 3 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 12 முதல் 14 வரை]

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

SECTION – A [Reading] 10 Marks

பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1. *பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.* **5 × 1 = 5**

தமிழர்கள் பல்வேறு இடங்களிலும் பற்பல தொழில்களை உடையவர்களாய் இருந்தாலும் அனைவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தது போலவே ஒருவருக்கொருவர் சிறிதும் வேறுபாடு இல்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையில் விளங்கியிருந்தனர். எல்லோரும் இந்நாட்டு மக்கள் எல்லாருக்கும் தமிழ்மொழி உரியது. எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே என்னும் ஒற்றுமை அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

'யாதும் ஊரே யாவருங் கேளிர்'

என்பது அவர்களின் தீர்மானமான கொள்கை.

எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு கொள்வார்கள். தமிழ் மக்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கு எல்லாருடைய உதவிகளும் கிடைக்க இடமிருந்தது.

தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் உண்பர்

'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'

என்று நற்றிணையில் இவ்வுண்மை குறிப்பிடப்படுகிறது. இத்தகைய கலந்த மனப்பான்மையே அவர்கள் நாகரிகம் என்று கருதினார்கள் என்றால் அவர்களிடம் உள்ள மாட்சிமைதான் எவ்வளவு பெரியது! சங்ககால முன்னோர்களும் இவ்வகையில் நனி நாகரிகராய் விளங்கியிருந்தனர்.

வினாக்கள்:

(i) அக்கால மக்கள் எப்படி விளங்கினர்?

(A) உயர்ந்த அன்பு

(B) ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைபோல்

(C) உயர்ந்த ஒழுக்கம்

(D) உயர்ந்த கொள்கை

(ii) தமிழர்களிடம் என்ன மேலோங்கியிருந்தது?

(A) நல்லெண்ணம்

(B) பிரிவினை எண்ணம்

(C) வேற்றுமை எண்ணம்

(D) ஒற்றுமை எண்ணம்

(iii) தமிழ் மக்களின் தீர்மானமான கொள்கை என்ன?

(A) பல் சான்றீரே! பல் சான்றீரே!

(B) 'நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'

(C) யாதும் ஊரே யாவரும் கேளிர்

(D) பிரிவினைவாதம்

(iv) 'நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' என்பது _____ செய்யுளில் இடம் பெற்றுள்ளது.

(A) நற்றிணை

(B) அகநானூறு

(C) குறுந்தொகை

(D) புறநானூறு

(v) தமிழர்கள் உணவு உட்கொள்ளும் முறை யாது?

(A) எல்லோரும் தனித்தனியாக அமர்ந்து உண்ணுதல்

(B) ஒன்றாக அமர்ந்து உண்ணுதல்

(C) தம் குடும்பத்தோடு அமர்ந்து

(D) தம் உறவினரோடு அமர்ந்து

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

நாடோடி மனிதனை நாகரிக மனிதனாக மாற்றி அமைத்ததே அறிவியல் தான். மலைக்குள் வாழ்ந்தவன் இன்று மாளிகையில் வாழ்கின்றான். நடந்து சென்றவன் பறந்து செல்கிறான். பச்சை மாமிசத்தை இச்சையுடன் தின்றவன் சுட்டுத் தின்பதற்காகத் தீயைக் கண்டபோது அறிவியல் தோன்றியது. இரு சக்கர வண்டியைக் கண்டபோது அறிவியல் நிமிர்ந்தது. பருத்திப் பஞ்சின் பக்குவம் கற்றபோது வேரையே திருத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. தேவையே கண்டுபிடிப்பின் தந்தை என்பது அறிஞர் கூற்று. வீட்டில் தான் எத்தனை மாற்றங்கள். விளக்கெண்ணெய் வெளிச்சத்தில் வீட்டில் இருந்தவன் மின் விளக்கின் உதவியால் இருட்டைப் பகலாக்கி இன்பம் காணுகிறான். மனித மூளையின் மகத்தான சாதனை உள்ளங்கையில் உலகத்தைக் கொண்டு வந்து விட்டது. செயற்கை இதயமும் மாற்றுச் சிறுநீரகமும் மனித வாழ்வை மலர வைத்து விட்டது. அறிவு நிறைந்த அறிவியலை ஆக்கத்திற்குப் பயன்படுத்த மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

வினாக்கள்:

(i) அறிவியல் அறிஞரின் கூற்று யாது?

(ii) இன்று மாளிகையில் வாழ்ந்தவன் அன்று எங்கு வாழ்ந்தான்?

(iii) நாடோடி மனிதனை நாகரிக மனிதனாக மாற்றி அமைத்தது எது?

(iv) மனித மூளையின் மகத்தான சாதனை எது?

(v) மாணவர்களை எதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்?

SECTION – B [Grammar] 12 Marks

பகுதி – ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) இனமொழி விடை

(A) ஆடுவாயா? என்ற வினாவிற்கு ஆடுவேன் எனக் கூறுவது

(B) ஆடுவாயா? என்ற வினாவிற்கு ஆட மாட்டேன் என உரைப்பது

(C) ஆடுவாயா? என்ற வினாவிற்கு பாடுவேன் என உரைப்பது

(D) பாடுவாயா? என்ற வினாவிற்கு சிரிப்பேன் என உரைப்பது.

(ii) படர்க்கை பெயர்கள்

(A) நான், நாங்கள் (B) நீ, நீங்கள்

(C) அவன், அவள் (D) நீர், நீவிர்

(iii) வினையெச்சத் தொடர்

(A) சென்று வந்தான் (B) சென்ற மாணவன்

(C) வந்தான் சென்றான் (D) பாடினாள் கண்ணகி

(iv) பண்புத்தொகை

(A) இன்சொல் (B) வீசு தென்றல்

(C) இந்திய நாடு (D) கார் குழல்

(v) தொடர்மொழி

(A) வா, போ (B) கடமையைச் செய்

(C) தாமரை (D) உறங்கல்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. *(மூன்று மட்டும்)* **3 × 1 = 3**

(i) விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் _____ பெயராகும்

(A) முதனிலைத் தொழில்

(B) தொழில்

(C) முதனிலைத் திரிந்த தொழில்

(D) வினையாலணையும்

(ii) உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது _____ எனப்படும்.

(A) உம்மைத்தொகை (B) உவமைத்தொகை

(C) வினைத்தொகை (D) பண்புத்தொகை

(iii) முற்றுப் பெறாத வினை பெயர்ச்சொல்லைத் தொடர்வது _____ எனப்படும்.

(A) பெயரெச்சத்தொடர் (B) வினையெச்சத்தொடர்

(C) வினைமுற்றுத்தொடர் (D) இடைச்சொல் தொடர்

(iv) இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது _____ ஆகும்.

(A) வழுநிலை (B) வழா நிலை

(C) வழுவமைதி (D) பொது மொழி

(v) அகத்திணைகள் _____ வகைப்படும்

(A) ஐந்து (B) ஏழு

(C) எட்டு (D) ஆறு

5. இலக்கணக் குறிப்பு எழுதுக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) ஆடுக

(A) வியங்கோள் வினைமுற்று

(B) பண்புத்தொகை

(C) வினையாலணையும் பெயர்

(D) தொழிற்பெயர்

(ii) செந்தீ

(A) பண்புத்தொகை

(B) வினைத்தொகை

(C) இருபெயரொட்டு பண்புத் தொகை

(D) உம்மைத்தொகை

(iii) முகிழ்ந்த

(A) வினையெச்சம் (B) பெயரெச்சம்

(C) தனிமொழி (D) பொதுமொழி

(iv) நடந்து வந்தான்

(A) உம்மைத்தொகை

(B) வினையெச்சத்தொடர்

(C) பெயரெச்சத்தொடர்

(D) எண்ணும்மை

(v) வாழ்த்துவோம்

(A) தன்மை ஒருமை வினைமுற்று

(B) தன்மை பன்மை வினைமுற்று

(C) படர்க்கை ஒருமை வினைமுற்று

(D) படர்க்கை பன்மை வினைமுற்று

6. கூறியவாறு செய்க : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் – அளபெடையைக் கண்டறிக.

(A) ஒற்றளபெடை

(B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை

(D) செய்யுளிசை அளபெடை

(ii) ஞாயிறு, சித்திரை – இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக மாற்றுக.

(A) கிழமை ஞாயிறு, மாதம் சித்திரை

(B) கிழமை, மாதம்

(C) ஞாயிற்றுக்கிழமை, சித்திரை மாதம்

(D) சித்திரை ஞாயிறு

(iii) நன்மையானமொழி – பண்புத்தொகையாக மாற்றுக.

(A) நன்மைமொழி

(B) மொழிநன்மை

(C) நன்மொழி

(D) நன்மை

(iv) சொக்க வெள்ளிப்பாற்குடமோ? அமுத ஊற்றோ? – வினாவகையைக் கூறு.

(A) அறி வினா

(B) ஐய வினா

(C) அறியா வினா

(D) கொடை வினா

(v) இளவேனிற் காலம் – பெரும் பொழுதிற்கான மாதங்களை எடுத்தெழுதுக.

(A) சித்திரை, வைகாசி

(B) ஆனி, ஆடி

(C) ஆவணி, புரட்டாசி

(D) ஐப்பசி, கார்த்திகை

SECTION – C (Main Course Book) 31 Marks

பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. **2 × 1 = 2**

(i) அஞ்சும் அறியான் _____ ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

(A) அமைவிலான் (B) அமைவிலன்

(C) பகைவிலான் (D) பகைவிலான்

(ii) கரப்பிடும்பை இல்லாரைக் காணின் _____
எல்லாம் ஒருங்கு கெடும்.

(A) நிரப்பிடும்பை

(B) நிறப்பிடும்பை

(C) நிரைப்பிடும்பை

(D) நிறைப்பிடும்பை

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

'அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் என்னே.'

வினாக்கள் :

(i) பாடலடியில் குறிப்பிடப்படும் மன்னன் _____

(A) சேரன் (B) சோழன்

(C) பாண்டியன் (D) நன்னன்

(ii) மேற்கண்ட பாடலடிகள் இடம் பெற்ற நூல் _____

(A) பரிபாடல்

(B) மலைபடுகடாம்

(C) ஆற்றுப்படை

(D) நீதிவெண்பா

(iii) வயிரியம் – சொல்லின் பொருள் யாது?

(A) வைரம்

(B) கூத்தர்

(C) பாணர்

(D) சோறு

(iv) இச்செய்யுளில் அமைந்துள்ள எதுகையை எடுத்து எழுதுக.

(A) அலங்கு, அடைந்திருந்த

(B) அலங்கு, சிலம்பு

(C) வலம்படு, வயிரியம்

(D) நோன்தாள், எய்தி

(v) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று _____

(A) மலைபடுகடாம்

(B) நற்றிணை

(C) பதிற்றுப்பத்து

(D) புறநானூறு

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 3 = 9**

(i) பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக அமைந்த கவிஞரின் கருத்துகளை தொகுத்து எழுதுக.

(ii) பரஞ்சோதி முனிவர் பற்றி குறிப்பு வரைக.

(iii) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

(iv) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

(v) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 5 = 15**

(i) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் விரிவான உரைக் குறிப்புகளை எழுதுக.

(ii) நும் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை நயம்பட விவரித்து எழுதுக.

(iii) எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தால் மனிதகுலத்திற்கு ஏற்படுகிற நன்மைகள் குறித்து விரிவான தொகுப்புரை ஒன்று தயார் செய்க.

(iv) மொழிபெயர்ப்பின் செம்மை பற்றி விவரி.

(v) தப்பு ஆட்டம் – விளக்குக.

SECTION – D (Non-Detail) 10 Marks

பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. *பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.*

1 × 10 = 10

(i) *கோபல்லபுரத்து மக்கள்.*

(ii) *விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை.*

(iii) *புதிய நம்பிக்கை*

SECTION – E (Creative Writing) 17 Marks

பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. (அ) *கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.* **1 × 3 = 3**



For Visually impaired Candidates

(ஆ) *பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.*

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) *ஒன்று பட்டால் உண்டு வாழ்வு*

(ii) *தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.*

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. **1 × 8 = 8**

(i) *Neet* – தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற உன் தமக்கையைப் பாராட்டி கடிதம் ஒன்று வரைக.

(அல்லது) **(OR)**

(ii) உங்கள் பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் ஒன்று வரைக.

(இரண்டு கடிதங்களிலும் 2ம் முகவரி அ. அனீஸ்பாத்திமா/அ.அன்வர் 10; பெரிய வீதி, ஜவஹர் நகர், சென்னை – 600 018)

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – கொரோனாவும் அறிகுறியும் – கொரோனாவின் தோற்றம் – மனிதர்களை கொல்வது எப்படி – பாதிப்புகள் – கொரோனாவிற்குத் தீர்வு – முடிவுரை

(அல்லது) **(OR)**

(ii) முன்னுரை – வருமுன் காப்போம் – உணவே மருந்து – நோயற்ற வாழ்வு – உடற்பயிற்சி – முடிவுரை

(அல்லது) **(OR)**

(iii) முன்னுரை – முயன்றால் முடியும் – மனோதைரியம் – முயன்றால் இயலாதது எதுவுமில்லை – வென்றவர்களில் சிலர் – முடிவுரை



	மத்திய இளநிலைக் கல்விக் கழகம்
	விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2024
	வகுப்பு : 10 **தமிழ் - 006**
	மொத்த மதிப்பெண்கள் – 80
1.	இருபத்து ஏழு (27) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக் கூடிய விடைத்தாள்களைத் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும்.
2.	வினாக்களுக்கு உரிய மதிப்பெண்கள் விடைத்தாளின் வலப் பக்கத்திலும் மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் எழுதி வட்டமிடுதல் வேண்டும்.
3.	விடைத்தாளில் எழுதாத பக்கங்களை அடிக்க வேண்டும். இறுதிப் பக்கத்தில் தேர்வாளரின் கையொப்பம் ,தேர்வாளர் எண், மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைக் குறிக்க வேண்டும். மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களை எழுதி வட்டமிடுதல் வேண்டும்.
4.	தேர்வுத்தாள் உரிய தேர்வாளரால் திருத்தப்பட்ட பின் மற்றொரு தேர்வாளர் மதிப்பெண்களின் கூட்டுத்தொகை மற்றும் விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி படி மதிப்பெண் வழங்கப் பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துத் தங்கள் தேர்வாளர் எண், கையொப்பம் ஆகியவற்றை இட வேண்டும். திருத்தங்களை உரிய தேர்வாளரிடம் கொடுத்துச் செய்ய வேண்டும்.

5.	புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
6.	பத்தி வினா விடைகளுக்குச் சரியான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.
7.	இலக்கண விடைகள் சரியாக எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். இலக்கண வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 5 விடைகள் எழுதியிருப்பின் சரியான மூன்று விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம். .
8.	திருக்குறள் நிரப்புக இடத்தில் சரியான சீர் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.
9.	செய்யுள் பாடலடி வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.
10..	செய்யுள் வினாக்களுக்குப் பொருத்தமான விடை பிழையற எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்..
11.	உரைநடை வினாக்களுக்குப் பொருத்தமான விடைகள் பிழையற எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.

12.	துணைப்பாடம் கட்டுரை அமைப்பு மாறாமலும் சிறந்த நடையுடனும் எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். பிழைகளற்ற கட்டுரை வடிவத்திற்கு முழு மதிப்பெண்கள் 10/10 வழங்கலாம். அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும்
13.	காட்சியைக் கண்டு கவினுற எழுதுக பகுதியில் படத்துக்குத் தகுந்த தலைப்புடன் 4 முதல் 5 தொடர்கள் எழுதியிருப்பின் 3/3 மதிப்பெண் வழங்கலாம்.
14..	கட்டுரை - தலைப்பு ,முன்னுரை, தக்க உட்தலைப்புகள் மேற்கோள்கள் எழுதியிருப்பின் அவ்வப்பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி வட்டமிடவும்
15.	அதிகபட்ச மதிப்பெண் 80 /80 . தகுதியான பிழைகளற்ற விடைத்தாள்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.

MARKING SCHEME FOR BOARD EXAM

2023-2024 (X – STD – TAMIL)

மதிப்பெண் வழங்கும் முறை

வகுப்பு : 10 **தமிழ் - 006**

மொத்த மதிப்பெண்கள் - 80

பகுதி – அ(படித்தல் திறன்)

1. பத்தியைப் படித்துப் பின்வரும் பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக: 5 x 1 = 5

i) A. உயர்ந்த பண்பு அல்லது B. ஒருதாய் வயிற்றுப் பிள்ளை போல்

ii) D. ஒற்றுமை எண்ணம்

iii) C. யாதும் ஊரே யாவரும் கேளிர்

iv) A. நற்றிணை

v) B. ஒன்றாக அமர்ந்து உண்ணுதல்

2. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி 5 x 1 = 5

i) தேவையே கண்டுபிடிப்பின் தந்தை

ii) மலைக்குள் வாழ்ந்தான்.

iii) அறிவியல்

iv) உள்ளங்கையில் உலகத்தைக் கொண்டு வந்து விட்டது.

v) அறிவு நிறைந்த அறிவியலை ஆக்கத்திற்குப் பயன்படுத்த

பகுதி –ஆ (இலக்கணப் பகுதி)

3. சான்று தருக (மூன்றனுக்கு மட்டும்) 3 x 1 =3

i) C. ஆடுவாயா? என்ற வினாவிற்குப் பாடுவேன் என உரைப்பது

ii) C. அவன், அவள்

iii) A. சென்று வந்தான்

iv) A. இன்சொல்

v) B. கடமையைச் செய்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக (மூன்று மட்டும்) 3 x 1 =3

i) A. முதனிலைத் தொழில்

ii) B. உவமைத்தொகை

iii) A. பெயரெச்சத் தொடர்

iv) C. வழுவமைதி

v) B. ஏழு

5. இலக்கணக் குறிப்பு எழுதுக (எவையேனும் மூன்று மட்டும்) 3 x 1 =3

i) A. வியங்கோள் வினைமுற்று என்பதே சரியான விடை எனினும் பாடத் திட்டத்தில் இவ்விலக்கணம் இல்லாததால் D. தொழிற்பெயர் எழுதியிருப்பின் 1 மதிப்பெண் வழங்கலாம்.

ii) A.பண்புத்தொகை

iii) B. பெயரெச்சம்

iv) B. வினையெச்சத் தொடர்

v) B. தன்மை பன்மை வினைமுற்று

6. கூறியவாறு செய்க (மூன்று மட்டும்) 3 x 1 =3

I) D. செய்யுளிசை அளபெடை

ii) C. ஞாயிற்றுக் கிழமை, சித்திரை மாதம்

iii) C. நன்மொழி

iv) B. ஐய வினா

v) A. சித்திரை, வைகாசி

பகுதி – இ (இலக்கியம்)

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக: 2 x 1 = 2

i) B. அமைவிலன்

ii) A. நிரப்பிடும்பை

8. செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக 5 x 1 = 5

i) D. நன்னன்

ii) B. மலைபடுகடாம்

iii) B. கூத்தர்

iv) B. அலங்கு, சிலம்பு என்பதே சரியான விடை எனினும் பாடத் திட்டத்தில் தொடை வகைகள் இலக்கணம் இல்லாததால் A, B, C, D எவ்விடை எழுதியிருப்பினும் 1 மதிப்பெண் வழங்கலாம்.

v) A. மலைபடுகடாம்

9.செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி 3 x 3 = 9

i) **பூத்தொடுத்தல்**

- இந்தப் பூவை நான் எப்படித் தொடுப்பேன். இந்தப் பூவின் மெல்லிய தண்டுகள் அமைதியான உலகத்தைச் சுமக்கின்றன.

- இந்தப் பூவின் மெல்லிய தண்டை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு அறுந்து முறியும். தளரப் பிணைந்தால் மலர்கள் தரையில் நழுவும்.

- இவ்வாறு வாசலில் மரணம் நிற்பதை அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இப்பூவை நான் எப்படித் தொடுப்பேன்?

- ஒரு வேளை என் மனம் மிக நுட்பமாக மாறி நூலாகினால் மட்டுமே இது இயலும் என்கிறார் கவிஞர் உமா மகேஸ்வரி.

- ii) **பரஞ்சோதி முனிவர் – குறிப்பு**

- திருவிளையாடல் புராணம் நூலை எழுதியவர் பரஞ்சோதி முனிவர்.
- இவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர்.
- பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள். (எவையேனும் 3 கருத்துகள் எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

iii) **பரிபாடல் – கருத்து**

- எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.
- உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது.
- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாக பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.
- பிறகு நெருப்புப் பந்து போல் புவி உருவாகி விளங்கிய ஊழிக் காலம் தொடர்ந்தது.
- பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது.
- அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
- மீண்டும் மீண்டும் நிறைவெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும் படியாக ஊழிக் காலம் வந்தது.
- **குறிப்பு** : ஐம்பூதங்கள் குறித்த செய்திகளை எளிமையான தொடர்களில் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.

iv) **முகமன் கூறும் செய்திகள்**

- விருந்தினராக ஒருவர் வந்தால் அவரை வியந்து உரைத்தல்
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்
- முக மலர்ச்சியுடன் அவரை நோக்குதல்
- வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்

- விருந்தினர் எதிரில் நிற்றல்அவர் முன் மனம் மகிழும் படிப் பேசுதல்
- அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல்
- அவர் விடை பெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லுதல்
- விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழி அனுப்புதல்
- ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

v) மழை நின்றவுடன் புலப்படும் காட்சி

- துன்பம் தரும் மாலைப் பொழுதில் முதுபெண்டிர் தலைவிக்காக இறைவனைத் தொழுது விரிச்சி கேட்டு நிற்றல்.
- இடையர் மகள், பசியால் வருந்திய இளங்கன்றிடம் 'உன் தாயர் புல்லை மேய்ந்து வருவர்' வருந்தாதே! என ஆறுதல் கூறுதல்.
- இதனை நற்சொல் எனக் கேட்டு முது பெண்டிர் தலைவன் திறைப் பொருள்களோடு வருவது உறுதி எனத் தலைவிக்கு ஆறுதல் கூறுதல்.
- **குறிப்பு:** பொது வினாவாகக் கேட்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் கற்பனைத்திறன் விடைகள் மற்றும் நம் பாடநூலில் உள்ள பாடப் பகுதியை ஒட்டி வருணனையுடன் வேறு விடைகள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்.
  (குறைந்த பட்சம் 3 மதிப்பெண்களுக்கு 2 மதிப்பெண் வரை வழங்கலாம்)

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக 3 x 5 = 15

i) **தமிழ்ச் சொல்வளம்**

- தமிழ் மொழி சொல்வளம் மிக்கது.
- ஆங்கிலம் போன்ற மொழிகளில் இலையைக் குறிக்க ஒரே ஒரு சொல் மட்டுமே உள்ளது.
- தமிழில் இலை, தோகை , ஓலை என்னும் பாகுபாடு உள்ளது.
- தாவரங்களின் மணிவகை ,இளம்பயிர் வகை ,காய்கனி வகை, அடி, கிளை ,கொழுந்து என அனைத்து உறுப்புகளுக்கும் சொற்களைப் பகுத்து வைத்துள்ளனர்.
- **குறிப்பு:** இத்துடன் தமிழ்ச் சொல்வளம் குறித்துப் பாடப் பகுதியில் உள்ள எவ்விடைகள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்.

ii) **விருந்தினர்க்குச் செய்த விருந்தோம்பல்**

- ஏதேனும் ஒரு இல்லவிழா அல்லது வீட்டிற்கு வந்த விருந்தினரை விருந்தோம்பிய செயல்கள் பற்றி எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்
- **குறிப்பு:** விருந்தோம்பும் முகமன் சொற்கள் எழுதி இருந்தாலும் மதிப்பெண் வழங்கலாம்:

iii) **தொழில்நுட்பம் (செயற்கை நுண்ணறிவு)**

எதிர்காலத்தில் செயல்படும் விதம்

- வேலை வாய்ப்புகளில் மாற்றம்.
- குழந்தைகள் ,வயதானவர்கள் அடையும் நன்மைகள்
- மனிதர்களால் இயலாத செயல்களைச் செய்தல்

- புதிய வணிக வாய்ப்புகள் ,பொருள்களைச் சந்தைப்படுத்தல்
- விடுதிகள் ,வங்கிகள், அலுவலகப் பயன்பாடு
- ஊர்திகளை ஓட்டுவதன் பயன்கள்
- கல்வித் துறையில் பயன்பாடு
- இத்துடன் மாணவர்கள் தாம் அறிந்த புதிய தொழில்நுட்பம் பற்றிய கருத்துகளை எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.
- **குறிப்பு** : பெப்பர்,வாட்சன் , இலா பற்றி எழுதியிருந்தாலும் புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவு பாடக் கருத்துகள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.

iv) **மொழி பெயர்ப்பின் செம்மை**

- Hundred rail sleepers were washed away —தொடர் வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர் என்பது தவறான மொழிபெயர்ப்பு.

- தொடர் வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும்.

- Camel - பொருள் - ஒட்டகம், வடம் – ஊசி காதில் ஒட்டகம் நுழையாது – தவறான மொழிபெயர்ப்பு.

- ஊசி காதில் வடம் நுழையாது – சரியான மொழிபெயர்ப்பு.
- Underground drainage –தமிழில் பாதாளச் சாக்கடை – மலையாள மொழி-புதைச் சாக்கடை என்பதே பொருத்தம்

- ·Tele - தொலை – தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைவரி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்னும் முன்னொட்டுகளுடன் மொழி பெயர்க்கப்பட்டன.

- Trans - பலபொருள்கள் – படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல் படுத்துதல் என இடம் பார்த்து மொழிபெயர்க்கப் படுகின்றன.

v) **தப்பாட்டம் – விளக்குக**

- தப்பு என்பது தோற்கருவி – இசைத்துக் கொண்டே ஆடும் கலை
- ஆண்கள் மட்டுமே ஆடிய இக்கலை பெண்களாலும் ஆடப்படுகிறது.
- இதன் வேறு பெயர்கள் தப்பாட்டம், தப்பு,தப்பட்டை
- கோவில் திருவிழா, திருமணம், விளம்பர நிகழ்ச்சி, விழிப்புணர்வு முகாம் ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படும்.
- 'தப் தப் 'என்று ஒலிப்பதால் தப்பு எனப் பெயர் பெற்றது.
- வட்டமாக ஆடுதல், இரண்டு வரிசையாக நின்றாடுதல் , எதிர் எதிர் திசையில் நின்றாடுதல் , அனைவரும் நேர் வரிசையில் நின்று ஆடுதல், குதித்து குதித்து ஆடுதல், உட்கார்ந்து எழுதல், நடை ஆட்டம் ஆகிய ஆட்டக்கூறுகளை இன்றைய கலைஞர்களிடம் காண முடிகிறது.
- குழுவாகப் பங்கேற்கின்றனர்.

  (உரைநடை விடைகளுக்கு குறைந்த பட்சம் 5 மதிப்பெண்

  களுக்கு 3 மதிப்பெண்கள் வரை வழங்கலாம்.பிழைகளற்ற விடைகளுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம்)

11. துணைப்பாடம் – கட்டுரை (ஏதேனும் ஒன்று) 1 x 10 =10

முன்னுரை – 1 மதிப்பெண். துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 8 மதிப்பெண்கள் முடிவுரை -1 மதிப்பெண்

i) கோபல்லபுரத்து மக்கள் – முன்னுரை – அதிகாலை கிராமத்துக் காட்சி – அன்னமய்யா வாலிபனைச் சந்தித்தல் - அன்னமய்யாவின் செயல் – விருந்தோம்பும் பண்பு – சுப்பையா புஞ்சைக்குச் செல்லுதல் – முடிவுரை

ii) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை – முன்னுரை – ஸ்டீபன் ஹாக்கின் தோற்றம் – கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கின் கருத்து – அறிவியல் கோட்பாடு - ஸ்டீபன் ஹாக்கின் பெற்ற விருதுகள் – முடிவுரை.

iii) புதிய நம்பிக்கை – முன்னுரை – மேரிஜேன் குடும்பநிலை – மேரிக்குப் பிடித்த சூழல் – மேரியின் விருப்பம் – மேரி ஜேன் பெற்ற கல்வி – பட்டமளிப்பு விழா – முடிவுரை

குறிப்பு : (மேற்கண்ட தலைப்புகளுடன் பிற பொருத்தமான தலைப்புகள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம். முன்னுரை முடிவுரை இன்றிப் பத்தி வடிவில் எழுதி இருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவத்துக்குக் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் பிழையற்ற கட்டுரை வடிவத்துக்கு முழு மதிப்பெண்களும் வழங்கலாம்)

பகுதி - உ (படைப்பாற்றல்)

12. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக 1 x 3 = 3

4 அல்லது 5 தொடர்கள் எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.

தலைப்பு – ½

தொடர்கள் – 2 ½ மதிப்பெண்கள்

13. கடிதம் - உறவு முறை அல்லது அலுவலகம் 1 x 8 = 8

i) உறவுமுறைக் கடிதம்

முகவரி – 1 மதிப்பெண்

விளி – ½ மதிப்பெண்

நலம் கேட்டல் - 1 மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 ½ மதிப்பெண்

முடிப்பு – 1 மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

(அல்லது)

ii) அலுவலகக் கடிதம்

அனுப்புநர் – 1

பெறுநர் -1

விளித்தல் – ½

பொருள் – ½

உள்ளடக்கம் – 3

முடிப்பு – ½

இடம், நாள் -1

உறை மேல் முகவரி – ½

14. பொதுக் கட்டுரை (ஏதேனும் ஒன்று) 1 x 6 = 6

தலைப்பு – ½

முன்னுரை -½

மேற்கோள் – ½

முடிவுரை - ½

துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 4 மதிப்பெண்

குறிப்பு : கட்டுரை பிழையின்றி எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்த பட்சம் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்

மொத்த மதிப்பெண்கள் – 80/ 80

##########